தப்பு செய்தவர் திருந்தியாகணும் தவறு செய்தவர் வருந்தியாகணும்

# லட்சியம் வெல்லும்

LATCHIYAM VELLUM

அரசியல்-சமூக விழிப்புணர்வு மாத இதழ்

மலர் : 11 இதழ் : 6 டிசம்பர் – 2025 விலை ரூ. 20/-



## திருப்பரங்குன்றத்தில் வேட்பாளரை களம் இறக்க பாஜக ஸ்கெட்ச்!



## விஜய்-க்கு துணை நிற்கும் சூழ்ச்சுகள்?



## அதிகரித்து வரும் சாலை விபத்து மரணங்கள்?

## மீண்டும் சூடு பிடிக்கும் ராமஜெயம் கொலை வழக்கு!

## கொங்கு மண்டலத்தில் கிங் மேக்கர் யார்?



குறைந்த கட்டணம் ! சிறந்த கல்வி !!

# ஸ்ரீ இராமகிருஷ்ணா மழலையர் & தொடக்கப்பள்ளி

வளவனூர்

1990ம் ஆண்டு முதல் வெற்றிகரமான கல்விப்பணியில்...

**சிறப்பு அம்சங்கள்**

- காட்சி, ஒலி மற்றும் விளையாட்டு வழிமுறை கல்வி
- சான்றளிக்கப்பட்ட மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்
- CCTV கேமரா இயக்கப்படுகின்றது
- சராசரி ஆசிரியர் மாணவர் விகிதம் (1:15)
- இணை பாடத்திட்ட நடவடிக்கைகளுக்கான பெரிய அரங்கம்
- மாணவர்களுக்கான மேடை செயல்பாடு
- நன்கு கட்டமைக்கப்பட்ட கான்கிரிட் கட்டிடம்
- நல்ல காற்றோட்டமான வகுப்பறை
- குளிரூட்டப்பட்ட (AC) நர்சரி வகுப்புகள்
- கராத்தே, யோகா, வண்ணம் தீட்டுதல் (ம) ஓவியம் வரைதல் பயிற்சி அளிக்கப்படுகிறது

நமது பள்ளியில் பயின்ற மாணவ மாணவியர்கள் தங்கள் 10-ஆம் வகுப்பு 12-ஆம் வகுப்பு பொதுதேர்வுகளில் ஒவ்வொரு வருடமும் முதலிடம் பிடித்து வருகின்றார்கள்







NKSV நாயுடு நகர், வளவனூர், விழுப்புரம் - 605108

73057 04331

ramakrishnaschoolvnr91@gmail.com

# லட்சியம் வெல்லும்

அரசியல்-சமூக விழிப்புணர்வு மாத இதழ்

மலர் 11 | இதழ் 6 | டிசம்பர் - 2025



ஆசிரியர்-வெளியீட்டாளர்

பேராசிரியர் சு.சதாசிவம் M.A., B.Ed., M.Phil.,

நிர்வாக ஆசிரியர்: M.மணிகண்டன்

இணை ஆசிரியர்: P.சுரேஷ் ஆப்ரகாம்

உதவி ஆசிரியர்: S.சின்னதுரை

துணை ஆசிரியர்: A.சிவக்குமார்

சிறப்பு ஆசிரியர்: K.சதீஸ்குமார்

தலைமை செய்தியாளர்:
D.முத்துக்குமார், சிவா (எ) கென்னடி,

சிறப்பு செய்தியாளர்: G.சேதுராமன்

நிருபர்கள்:
V.ரவிச்சந்திரன், J.ரவி, S.ஓம்வசி, A.P.சுதாகர், S.ராம்குமார், K.கிஷோர்குமார், K.செந்தில்குமார், D.மனோகர், T.ரவிச்சந்திரன், R.தினேஷ், S.உக்கிரமபாண்டியன், S.சண்முகராஜா, V.காசிலிங்கம், S.கோவிந்தராஜ், V.ரவிசங்கர், A.லோகேஸ்குமார், K.M.ஜெகதீஸ்வரன், G.அருண்பாஸ்கர், C.ஆறுமுக நயினார், R.ராகுல், R.ராஜமாணிக்கம்

கௌரவ ஆலோசகர்கள்:
பொ.ஜெயபாலன், A.ஐசக் அருள்ராஜ்,

ஆலோசகர்கள்:
S.முகமது ஜியாவுதீன், மகேந்திரன், P.மாரிமுத்து, A.A.S.விக்டர், S.தனபால், B.சசிக்குமார்,

கௌரவ சட்ட ஆலோசகர்கள்:
வழக்கறிஞர் Dr. R.ராமச்சந்திரன்,
M.Com., L.L.B., M.L.M., PGDCSA, M.Phil, M.A., PGDPM&IR., M.Phil., M.B.A., PGDJ&MC., M.Ed.Tech., PGDC&IL., M.Sc. (Psy)., LL.M., Ph.D.,

தலைமை சட்ட ஆலோசகர்கள்:
வழக்கறிஞர் R.சரவணன், M.L., உயர்நீதிமன்றம், சென்னை
மூத்த வழக்கறிஞர் J.மதியழகன், B.A., B.L.,

சட்ட ஆலோசகர்கள்:
வழக்கறிஞர் S.ஷேக்ஸ்பியர், M.L.,
வழக்கறிஞர் K.சுப்பையா, B.A., B.L.,



லட்சியம் வெல்லும்

முகவரி: எண்:2/48 சி, சம்பூர்தி காம்ப்ளக்ஸ் , 2-வது தளம் , பொன்னகர் , திருச்சி - 620 001.

Cell: 94438-52805, 99434-83046

E Mail : latchiyamvellum@gmail.com



லட்சியம் வெல்லும் மாத இதழில் வெளியாகும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களின் சொந்த கருத்துக்களே நிர்வாகத்தின் கருத்தல்ல.லட்சியம் வெல்லும் இதழில் வெளியாகும் விளம்பரங்களின் வாசகங்களுக்கும், அதன் நம்பகத் தன்மைக்கும் நிர்வாகம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது. பத்திரிகை தொடர்பான எல்லா வழக்குகளும் திருச்சி நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.


## தலையங்கம்

# S.I.R வேலை பளுவால் தொடரும் சோகம்...

தமிழகம், மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், கேரளா உள்ளிட்ட 12 மாநிலங்களுக்கு சார் எனப்படும் வாக்காளர் சிறப்புப் பட்டியல் திருத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் பணியாற்றி வரும் பிஎல்ஓ எனப்படும் வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள் பணி சுமை காரணமாக சில மோசமான முடிவுகளை எடுத்து வருகிறார்கள்.

பொதுமக்கள் தேர்தல் தொடர்பான படிவங்களைப் பூர்த்தி செய்யவும், விவரங்களைப் பதிவேற்றவும் இந்த பிஎல்ஓ அதிகாரிகள் உதவுவார்கள்.

இந்தப் பணிகளால் கடும் அழுத்தம் ஏற்படுவதாக வாக்குச்சாவடி அதிகாரிகள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறார்கள்.

தங்களின் வழக்கமான பணிகளுடன், தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கப்பட்ட கூடுதல் பணிகள் உட்பட, அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டால், மாநில அரசு அத்தகைய சிரமங்களைக் களைய முடியும் என்று உச்ச நீதிமன்ற அமர்வு குறிப்பிட்டு உள்ளது.

மேலும் மாநிலங்கள் 'தேர்தல் ஆணையத்தின் வசம் கூடுதல் பணியாளர்களை நியமிப்பதன் அவசியத்தைப் பரிசீலிக்கலாம், இதன் மூலம் வேலை நேரத்தை விகிதாச்சாரமாகக் குறைக்க முடியும்' என்று கூறப்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு மாநில அரசு பி எல் ஓ க்களின் நிலை கருதி கூடுதல் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்பதே அனைவரின் எண்ணமாகும்.

– ஆசிரியர்

# தனிக்கட்சி?

# பின்வாங்கும் பன்னீர்...!



தமிழகத்தில் இன்னும் சில மாதங்களில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. ஆனால் தேர்தல் முடிவதற்குள் தமிழ்நாடு ஒரு வழி ஆகிவிடும் என்பது தான் உண்மை. திமுக கூட்டணிக்குள் சலசலப்பு இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல் அரசியல் செய்து வருகின்றனர். ஆனால் அதிமுக -வின் நிலை அப்படி இல்லை. பாஜக உடன் கூட்டணி வைத்ததில் இருந்தே பஞ்சாயத்துதான்.

மேலும் எடப்பாடி உள்கட்சி ஜனநாயகத்தை பாதுகாக்காததால்தான் கட்சியில் இருக்கும் முக்கிய நிர்வாகிகள் எல்லாம் கழன்று விட்டனர். அதற்கு காரணம் சமீபத்தில் நடந்த செங்கோட்டையனின் நீக்கம். ஏற்கனவே இருவருக்கும் முரண்கள் இருந்தாலும், பிரிந்தவர்களை ஒன்று சேர்க்க வேண்டும் என எடப்பாடிக்கு கெடு விதித்திருந்தார்.

உடனே செங்கோட்டையனின் கட்சி பதவி பறிக்கப்பட்டது. இந்நிலையில் கட்சியின் விதிகளுக்கு மாறாக, செயல்பட்ட ஓபிஎஸ் உடன் சேர்ந்து தேவர் குரு பூஜைக்கு சென்றதாகக் கூறி, கட்சியில் 50 ஆண்டுகால சீனியரான செங்கோட்டையனை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டார். உண்மையில் இபிஎஸ் எப்படி சமாளிக்க போகிறார் எனும் பல கேள்விகள் எழுந்த வண்ணம் உள்ளன. இந்த நிலையில் ஒபிஸ் -ம் தனது தனது ஆட்டத்தை துவங்கிவிட்டார்.

அதிமுக எப்போது எடப்பாடி பழனிசாமி கட்டுப்பாட்டுக்குள் சென்றதோ அப்போதிலிருந்து ஓபிஎஸ் தனது மவுசை இழந்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும். கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் தனது ஆதரவாளர்களை திரட்டி ‘அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக்குழு‘ என்ற பெயரில் தனிக்குழு அமைத்து செயல்பட்டு வருகிறார் ஓபிஎஸ்.

அதிமுகவில் இருந்தாலும் கடந்த பல ஆண்டுகளாக பாஜகவுடன் ஓ.பன்னீர் செல்வம் மிகவும் நெருக்கம் காட்டி வந்தார். தனது அரசியல் பிதாமகராகவே பிரதமர் மோடியை நினைத்துக்கொண்டார். அதாவது பிரதமர் கூறியதால்தான் துணை முதல்வர் பொறுப்பை ஏற்றேன் என்று சொல்லும் அளவுக்கு மோடிக்கும் அவருக்கும் நெருக்கம் இருந்தது.

இதனிடையே எடப்பாடி பழனிசாமி அதிமுகவின் பொதுச் செயலாளராக



பொறுப்பு வகிக்க எதிர்ப்பு தெரிவித்ததால் 2022ஆம் ஆண்டு கட்சியில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் அதிரடியாக நீக்கப்பட்டார். இதற்கு எதிராகவும், அதிமுக உள்விவகாரங்கள் குறித்தும் ஓபிஎஸ் தொடர்ந்த வழக்குகள் இன்னும் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில்தான் இருக்கிறது. அரசியல் ரீதியான பிரச்சனையை அரசியல் ரீதியாக தீர்க்காமல் சட்ட போராட்டத்தில் ஈடுபட்டது பன்னீர் செல்வத்துக்கு பொருளாதார ரீதியான நஷ்டத்தை ஏற்படுத்தியது நாடறிந்த உண்மை.

பாஜக -வை தீவிரமாக ஆதரித்து வந்த ஓபிஎஸ் தரப்பு திடீரென பாஜக எதிர்ப்பை நிலைநாட்டியதன் காரணம், NDA கூட்டணியில் இருந்து அவர் விலக்கப்பட்டதால் தான் என பேசப்பட்டது. அதனை உறுதி செய்யும் விதமாக, சில மாதத்திற்கு முன்னர் பாஜக கூட்டணியில் இருந்து ஓபிஎஸ் தலைமையிலான அணி விலகுவதாக முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கூட்டணியில் விலகிய அன்றே முதல்வர் ஸ்டாலினை அடையாற்றில் உள்ள முதல்வர் இல்லத்திலேயே சென்று சந்தித்தார். சந்தித்துவிட்டு வந்த பிறகு, அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை. நிரந்தர நண்பரும் இல்லை என பேசியிருந்தார்.

இதற்கிடையில் தான் ஓபிஎஸ், செங்கோட்டையன், சசிகலா, டிடிவி (அதிமுக -விலிருந்து நீக்கப்பட்டவர்கள்) ஆகியோர் இணைந்து முக்குலத்தோர் கூட்டணியை உருவாக்கவுள்ளதாகவும் சொல்லப்பட்டது. ஆனால் இதற்கிடையில் செங்கோட்டையன் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்துவிட்டார்.

இந்த பின்னணியில்தான் ஓபிஎஸ் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து விட்டு வந்தார். மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஓபிஎஸ் அதிமுக தொண்டர்கள் மீட்பு உரிமை கழகமாக நாங்கள் செயல்பட்டு கொண்டிருக்கிறோம். மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுடன் நடந்த சந்திப்பு மரியாதை நிமித்தமானது. அப்போது தமிழ்நாட்டின் இன்றைய அரசியல் சூழல் குறித்து எடுத்துக் கூறினேன்.

பிரிந்தவர்கள் ஒன்றுசேர வேண்டும் என்ற நோக்கத்தில் தான் டெல்லி சென்று அமித்ஷாவை சந்தித்தேன். தொண்டர்களின் எண்ணத்தையும் அமித்ஷாவிடம் கூறினேன். பிரிந்திருக்கும் அதிமுக சக்திகள் ஒன்றுபட வேண்டும் என்பதையே அமித்ஷாவுடன் வலியுறுத்தினேன். எம்ஜிஆர் தொண்டர்களின் இயக்கமான அதிமுக எப்போதும் பிளவுபடாது. ஒன்றிணைய வேண்டும் என்பதே எங்களின் நோக்கம். அதேபோல் தனிக்கட்சி தொடங்குவதாக நான் எப்போதும் சொல்லவில்லை. அதேபோல் செங்கோட்டையன் தவெகவில் இணைந்த பின் அவருடன் பேசவில்லை என்றும் தெரிவித்துள்ளார். டிசம்பர் மாத்திற்குள் அதிமுக ஒன்றிணைய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், டிசம்பர் மத்தியில் முக்கிய முடிவை அறிவிப்பேன் என்று ஓபிஎஸ் சில நாட்களுக்கு முன் கூறிஇருந்தார்.

ஓபிஎஸ் -க்கு திமுக -வும் கதவுகளை திறந்து வைத்துள்ளது. தவெக -வும் வரவேற்க தயாராகத்தான் உள்ளது . அமித்ஷா 'எடப்பாடியிடம் பேசிவிட்டு சொல்கிறேன்' என பேசியிருக்கிறாராம். ஆனால் டிசம்பருக்குள் எங்கு ஓபிஎஸ் தஞ்சம் புகுவார் என தெரிந்துவிடும் என்கின்றனர் சில அரசியல் விமர்சகர்கள்.

◆ T.ரவிச்சந்திரன்

முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் நமக்கு எந்த அரசியல் தேவை என்று ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார், கடந்த ஒரு வார காலமாக மட்டும் இல்லை கடந்த ஐந்து ஆண்டுகளாக இங்கே திமுகவின் ஆட்சி வந்தது முதலே பாஜக செய்ய முயல்வது கலவர அரசியல் தான் என்று பேசப்பட்டு வரும் நிலையில் அந்த கலவரக் கல்லைப் பற்றி பார்ப்போம்.



மதுரையைச் சுற்றியுள்ள மலைக் குன்றுகளில் நீங்கள் காணும் கல் தூண்கள், பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில் நிறுவப்பட்ட கிரேட் ட்ரிக்னோமெட்ரிகல் சர்வே (Great Trigonometrical Survey - GTS) புள்ளிகள் அல்லது இரண்டாம் நிலை நில அளவைக் குறியீடுகளாகும்.

இந்தியா முழுவதையும் அறிவியல் பூர்வமாக மிகத் துல்லியமாக நில அளவை செய்வதற்கான மாபெரும் முயற்சியில் இந்தக் கற்கள் முக்கியத் தரவுப் புள்ளிகளாகச் செயல்பட்டன.

நில அளவைக் கற்களின் நோக்கம், முக்கோணவியல் வலைப்பின்னல் (Triangulation Network) கிழக்கிந்திய கம்பெனியின் கீழ் பிரிட்டிஷார், 1802 ஆம் ஆண்டு சென்னையில் (அப்போதைய மெட்ராஸ்) உள்ள செயின்ட் தாமஸ் மவுண்ட் அருகே ஒரு அடிப்படையிலிருந்து (baseline) இந்த மாபெரும் நில அளவைத் திட்டத்தைத் தொடங்கினார்கள்.

வில்லியம் லேம்டன் மற்றும் ஜார்ஜ் எவரெஸ்ட் போன்ற புகழ்பெற்ற நில அளவையர்கள், நாடு முழுவதும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட முக்கோணங்களின் பரந்த வலையமைப்பை உருவாக்கினர். தொலைவில் உள்ள நில அளவை நிலையங்களுக்கு இடையே தெளிவான பார்வைக்கு மலைக்குன்றுகள் தேவையான உயரத்தை வழங்கின. அரை டன் தியோடோலைட் (half-ton theodolite) போன்ற துல்லியமான கருவிகளை நிறுவுவதற்கு நிரந்தரமான, நிலையான தளங்களாக இந்தக் கல் தூண்கள் அமைக்கப்பட்டன.

# கலவரத்தூணாக மாறிய அளவைக் குறியீடு கல் தூண்?



நிர்வாகம், வரிவிதிப்பு மற்றும் வள மேலாண்மைக்காக 'அங்குல அளவில் துல்லியமான வரைபடங்களை' உருவாக்குவதே இவர்களின் முதன்மை இலக்காக இருந்தது. இந்த நில அளவை ஒரு பெரிய அறிவியல் முயற்சியாகவும் இருந்தது. பூமியின் வடிவம் ஒரு கோளமாகும் என்பதை உறுதிப்படுத்தவும், எவரெஸ்ட் சிகரம் போன்ற இமயமலைச் சிகரங்களின் உயரத்தை மிகத் துல்லியமாக அளவிடவும் இது தரவுகளை வழங்கியது.

சாலைகள், இரயில்வேக்கள் மற்றும் கால்வாய்கள் போன்ற உள்கட்டமைப்புத் திட்டங்களைத் திட்டமிடுவதற்கு துல்லியமான வரைபடங்கள் அவசியமாக இருந்தன. அசல் பித்தளைத் தகடுகள் அல்லது குறியீடுகள் பல தொலைந்துவிட்டாலும் அல்லது திருடப்பட்டிருந்தாலும், சில கல் தூண்கள் அல்லது பாறைச் செதுக்கல்கள் இன்றும் அறிவியல் மற்றும் காலனித்துவ நிர்வாக வரலாற்றின் ஒரு உறுதியான எச்சங்களாக நிற்கின்றன.

நம் நாட்டின் அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்க, அல்லது ஒரு அரசு நிர்வாகம் செய்தற்கான அடிப்படை அளவீடுகளை வழங்க இந்த கல்தூண்கள் பெரிதும் பங்களித்துள்ளன.

நம்முடைய வளர்ச்சிக்கு பயன்பட்ட இந்த கல்தூன்களை இன்றைக்கு கலவரதூண்களாக மாற்றவே இன்றைய குறுகிய புத்தி படைத்த ஒரு அடிப்படைவாத கூட்டம் செயல்பட்டு வருகிறது.

கிராமங்கள் பலவற்றில் கிலோ மீட்டர் கற்கள் சாமியாக கும்பிடப்படுவதை பார்த்திருப்பீர்கள், அவை கிலோ மீட்டர் கல் தான் என்பதை அறிந்த பின்னும் இருந்துட்டு போகட்டும்பா எப்படியிருந்தாலும் இன்னொரு கல்லைத்தானே கொண்டு வந்து வைக்கனும் அதுக்கு இதே இருந்துட்டு போகுதுனு பெருந்தன்மையாகவே எளிய மக்கள் நடந்து கொண்டார்கள்.



அதுபோலவே இன்றைக்கு தமிழ்நாடு அரசை செயல்பட விடாமல், தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியை பாதிக்கும் ஓராயிரம் விசயங்களை ஒன்றிய அரசு தொடர்ச்சியாக செய்து வருகிறது. நிர்வாக ரீதியாக மட்டுமின்றி தமிழர்களை கொச்சைபடுத்தும் இவர்களின் பேச்சுகள் தினந்தோறும் அரங்கேறி வருகின்றன, இதை எல்லாம் கண்டுகொள்ளாமல் இந்த கலவரதூண் பிரச்சனையை தமிழ்நாட்டின் முதன்மை பிரச்சனையாக இவர்கள் அணி சேர்ந்து நடத்துவது காலத்தின் அவலம்.

ஆமாம் முதலைம்மச்சர் ஸ்டாலின் அவர்களே நிச்சயமாக நமக்கு தேவை வளர்ச்சியின் அரசியல் தான், வளர்ச்சியின் அரசியல் மட்டும் தான்...

◆ உக்கிரமபாண்டியன்


லட்சியம் வெல்லும்

## விளம்பர கட்டணம்

| | |
|---|---|
| பின் அட்டை கலர் | ரூ. 20,000 |
| முன் அட்டை உள் பக்கம் கலர் | ரூ. 15,000 |
| பின் அட்டை உள் பக்கம் கலர் | ரூ. 15,000 |
| கருப்பு வெள்ளை முழு பக்கம் | ரூ. 10,000 |
| கருப்பு வெள்ளை அரை பக்கம் | ரூ. 5,000 |

தமிழகம் முழுவதும் வெளிவரும் நமது லட்சியம் வெல்லும் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

மகளிரை தொழில் முனைவோராக ஊக்குவிக்க, ரூ. 10,000 முன்பணத்துடன் கூடியசுய தொழில் திட்டத்தை அமல்படுத்தி பீகாரில் பாரதிய ஜனதா கட்சி மாபெரும் வெற்றி பெற்றது. இந்த திட்டத்தின் கீழ், பீகாரில் உள்ள பெண்களுக்கு தொழில் தொடங்க ரூ. 2 லட்சம் வழங்கப்படும் என்றும், அதற்கு முன்பணமாக ரூ. 10,000 வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. முன்பணம் வாங்கியவர்கள் தொழில் தொடங்க தவறினாலும், அந்த ரூ. 10,000 தொகையை திரும்ப செலுத்த வேண்டியதில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தல் நேரத்தில் இந்த ரூ. 10,000 பணம் பெண்களின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்பட்டதே பீகாரில் பாஜக கூட்டணி அபார வெற்றி பெற முக்கியக் காரணமாக அமைந்ததாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பீகார் ஃபார்முலா

# மகளிர் வாக்குகளை தட்டி தூக்கபோகும் திமுக?

பாஜகவின் இந்த வெற்றிகரமான ஃபார்முலாவை தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழகம் செயல்படுத்த திட்டமிடலாம் கூறப்படுகிறது. குறிப்பாக, மகளிர் உரிமை தொகையான மாதம் ரூ. 1000 திட்டத்தை, திமுக ஆட்சிக்கு வந்த பின் 27 மாதங்கள் கழித்தே கொண்டுவந்தது. எனவே, அந்த 27 மாத பாக்கியை இரண்டு தவணைகளாக கொடுப்போம் என்று திமுக ஒருவேளை அறிவிக்கலாம் என்றும், முதல் தவணையாக ரூ. 10,000 தொகையை அனைத்து மகளிருக்கும் ஒரே நேரத்தில் வங்கிக்கணக்கில் வரவு வைப்பதாக அறிவிப்பு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று பேசப்படுகிறது.

பீகாரில் பாஜக தொழில் தொடங்குவதற்கான முன் பணமாக ரூ. 10,000 வழங்கியது.







# அதிமுக, தவெக என்ன செய்ய போகிறது?

ஆனால், தமிழகத்தில் திமுகவோ, தொழில் தொடங்குவதற்கு வழங்குவதற்கு பதிலாக, மாதம் ரூ. 1000 வழங்க வேண்டிய வாக்குறுதிப் பாக்கி தொகையைக் கொடுக்க போகிறோம் என்று அறிவிக்கும் உத்தியை கையாள வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. ஒருவேளை திமுக இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட்டால், பாஜக கொடுத்ததையே நியாயப்படுத்தியவர்கள், திமுக கொடுக்கும்போது அதையும் சேர்த்து நியாயப்படுத்துவார்கள் என்றும் கூறப்படுகிறது.

திமுகவின் இந்த வியூகம், வெற்றி பெற்ற பீகார் ஃபார்முலா என்பதால் இது மிகப்பெரிய வரவேற்பை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஃபார்முலா மட்டும் தமிழ்நாட்டில் சரியாக செயல்பட்டால், மாநிலத்தின் ஒட்டுமொத்த பெண்களின் வாக்குகளும் திமுக பக்கம் சென்றுவிடும் என்ற அச்சம் மற்ற கட்சிகள் மத்தியில் நிலவுகிறது. மகளிரின் வாக்குகள் ஒரு பக்கம் சாய்ந்தால், அது தேர்தல் முடிவுகளில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

திமுக இத்தகையதொரு அதிரடி அறிவிப்பை வெளியிட்டால், அதனை எப்படி சமாளிப்பது என்று எதிர்க்கட்சிகள் தற்போது தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, பிரதான எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்ற கழகம், திமுகவின் இந்த திட்டத்துக்கு எப்படி பதிலடி கொடுக்கலாம் என்று பல்வேறு விதமான ஆலோசனைகளை நடத்தி வருகிறது.

அதேபோல, தமிழக அரசியல் களத்தில் புதிதாக நுழைந்துள்ள விஜய்யின் தமிழக வெற்றிக் கழகமும் திமுகவின் இந்த சாத்தியமான அறிவிப்பு குறித்த தீவிரமான விவாதங்களை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது. பெண்களை மையப்படுத்திய இதுபோன்ற பெரிய அளவிலான நிதி சலுகைகள் தேர்தலுக்கு முன்பு அறிவிக்கப்பட்டால், அது தங்களது புதிய கட்சியின் அரசியல் வளர்ச்சிக்கு ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்து அவர்கள் சிந்தித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

◆ ஐசக் அருள்ராஜ்




# சம அதிகார பங்களிப்பு;
# வேற லெவலில் டீல்
## த.வெ.க அதிரடி!

தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் அவர்கள், வரவிருக்கும் சட்டமன்ற தேர்தல்களை மையமாக கொண்டு, தமிழ்நாட்டிற்கு அப்பாலுள்ள அண்டை மாநிலங்களிலும் கூட்டணி மற்றும் அதிகார பங்களிப்பு குறித்து பல கட்சிகளுடன் தீவிர பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக, முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தரப்பிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன. தவெகவின் இந்த கூட்டணி வியூகம், தேசிய கட்சியான காங்கிரஸ் மற்றும் மாநில கட்சிகளுடன் சமமான அதிகாரம் மற்றும் பரஸ்பர மரியாதை என்ற அடிப்படையில் அமைந்திருப்பது கவனத்தை ஈர்த்துள்ளது.

தமிழக வெற்றிக் கழகம், தேசிய அளவில் முக்கிய எதிர்க்கட்சியான காங்கிரஸுடன் கூட்டணி பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளது. இதில், ஒரு சமரசமான வியூகம் முன்வைக்கப் பட்டுள்ளது: வரவிருக்கும் தமிழகச் சட்டமன்ற தேர்தலில், காங்கிரஸ் கட்சிக்கு 40 சட்டமன்ற தொகுதிகளை விட்டுக்கொடுக்க தவெக தயாராக உள்ளது. இதற்கு ஈடாக, கேரள மாநிலத்திலும் தவெகவுக்கு சம அளவில் 40 சட்டமன்ற தொகுதிகளை காங்கிரஸ் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று விஜய் தரப்பு நிபந்தனை விதித்துள்ளது. இந்த 40க்கு 40 திட்டம், தவெக தமிழ்நாட்டில் தலைமை பொறுப்பை எடுப்பதுடன், கேரளாவிலும் கணிசமான அங்கீகாரத்தை பெற வழிவகுக்கும்.

வெறும் தொகுதி பங்கீடு மட்டுமின்றி, அதிகாரப் பங்களிப்பிலும் சமத்துவத்தை நிலைநாட்ட விஜய் தரப்பு வலியுறுத்துகிறது. தமிழ்நாட்டில் தவெகவுடன் கூட்டணி சேரும்பட்சத்தில், முதல்வர் பதவி தவெகவுக்கு வழங்கப்பட்டு, துணை முதல்வர் பதவி காங்கிரஸ் கட்சிக்கு கேட்கப்பட்டால், அதனை ஏற்றுக்கொள்ள தவெக தயாராக உள்ளது. அதேபோன்ற நிலை, கேரளாவிலும் நீடிக்க வேண்டும்



என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அதாவது, கேரளாவில் காங்கிரஸ் கட்சி முதல்வர் பொறுப்பை எடுத்தால், தமிழக வெற்றி கழகத்திற்குக் கேரளாவில் துணை முதல்வர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று தவெக பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கூறப்படுகிறது. ஒரு புதிய கட்சியின் இத்தகைய துணிச்சலான கோரிக்கை வித்தியாசமான அரசியல் வியூகமாகும்.

புதுச்சேரி அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் என்.ஆர். காங்கிரஸின் தலைவர் மற்றும் முதல்வரான ரெங்கசாமியுடன் தமிழக வெற்றி கழகம் கூட்டணி பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது. இந்த தகவல்களின்படி, புதுச்சேரியில் மொத்தமுள்ள 30 சட்டமன்ற தொகுதிகளில், என்.ஆர். காங்கிரஸ் மற்றும் தமிழக வெற்றி கழகம் ஆகிய இரு கட்சிகளும் தலா 15 தொகுதிகளில் போட்டியிடுவது குறித்து பேசப்பட்டுள்ளதாகவும், இந்த கூட்டணி வெற்றிபெற்றால், ரெங்கசாமி அவர்கள் புதுச்சேரியின் முதலமைச்சராக பொறுப்பேற்பார் என்றும், தமிழக வெற்றி கழகத்திற்குக் துணை முதல்வர் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பொதுவாக புதிதாக ஆரம்பிக்கும் மாநில கட்சிகள் உள்ளூர் அரசியலில் மட்டுமே கவனம் செலுத்தும் நிலையில், விஜய் மற்றும் அவரது முக்கிய வியூக குழுவினர், தமிழ்நாட்டிற்கு வெளியேயுள்ள அண்டை மாநிலங்களின் ஆட்சி அதிகாரத்திலும் பங்குபெற வேண்டும் என்ற லட்சியத்துடன் செயல்படுகின்றனர். தேசிய அளவில் கூட்டணிகளின் முக்கியத்துவத்தை பயன்படுத்தி, பிற மாநிலங்களில் கணிசமான இடங்களையும், முக்கிய அதிகார பொறுப்புகளையும் பெறுவதன் மூலம், தமிழக வெற்றி கழகத்தின் அரசியல் செல்வாக்கையும் தேசிய அளவில் உயர்த்த அவர்கள் திட்டமிடுகின்றனர்.

இந்த அதிர்ச்சியூட்டும் தகவல்கள், தென்னிந்திய அரசியலில் தவெகவின் வரவிருக்கும் தேர்தல்களுக்கான தீவிரத்தையும், அதன் வேற லெவல் அதிகார பங்களிப்பு கனவுகளையும் வெளிப்படுத்துகின்றன. இந்த விரிவான கூட்டணி பேச்சுவார்த்தைகள் மற்றும் அதிகார பங்களிப்புக் கோரிக்கைகளின் உண்மைத்தன்மை குறித்து எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் இதுவரை வெளியாகவில்லை. இருப்பினும், இந்த செய்திகள் அரசியல் வட்டாரத்தில் பெரும் விவாத பொருளாகவும் சலசலப்பாகவும் மாறியுள்ளன.

தமிழக வெற்றி கழகத்தின் இந்த வியூகம் குறித்து, தேசிய கட்சியான காங்கிரஸ் மற்றும் புதுச்சேரியின் என்.ஆர். காங்கிரஸ் கட்சி தரப்பிலிருந்து என்ன பதில் வரும் என்பதை அரசியல் பார்வையாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருக்கின்றனர்.

◆ சென்னை சிவக்குமார்


**செய்தியாளராக வேண்டும் என்பது உங்களின் நீண்ட நாள் கனவா?**

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் தாலுகா வாரியாக சமூக பொறுப்புடன் பணிபுரிய

**நிருபர்கள் தேவை!**

தங்களைப் பற்றிய முழு விவரங்களை புகைப்படத்துடன் இணைத்து கீழ்கண்ட இமெயில் (அ) வாட்சப் வழியாக அனுப்பி வைக்கவும்

latchiyamvellum@gmail.com
Cell: 94438 52805

மதுரை திருப்பரங்குன்றம் மலைக் கோவில் தீபம் சர்ச்சை தீவிரமடைந்துள்ள நிலையில், வரவிருக்கும் 2026 சட்டசபை தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க.) இத்தொகுதியில் வேட்பாளரை நிறுத்தலாம் என்ற யூகங்கள் வலுப்பெற்றுள்ளன. அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து பாஜக இங்கே களமிறங்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன. பாரம்பரியமாக, இத்தொகுதி அ.தி.மு.க. அல்லது தி.மு.க. போன்ற திராவிடக் கட்சிகளால் வெல்லப்பட்டு வந்துள்ளது. கடந்த தேர்தலில் அ.தி.மு.க.வின் வி.வி.ராஜன் செல்லப்பா வெற்றி பெற்றார்.

திருப்பரங்குன்றம் மலைக்கோவிலின் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்பதே தற்போதைய சர்சைக்கான முக்கியக் காரணம். சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பும் இக்கோரிக்கையை உறுதிப்படுத்தியது. கோவில் நிர்வாகமும் மாநில அதிகாரிகளும் தீர்ப்பைச் செயல்படுத்தாததால், இந்து அமைப்புகளும் பா.ஜ.க. தோழமைக் கட்சிகளும் போராட்டங்களில் ஈடுபட்டன. போராட்டக்காரர்களுக்கும் காவல் துறைக்கும் இடையே மோதல் வெடித்து, மத்திய தொழில் பாதுகாப்புப் படை (சி.ஐ.எஸ்.எஃப்.) உட்பட பாதுகாப்புப் படைகள் குவிக்கப்பட்டன. மத விவகாரத்தில் மத்தியப் படையின் இத்தலையீடு ஓர் அரிய நிகழ்வு.

திருப்பரங்குன்றத்தில் நடந்தது என்ன? திருப்பரங்குன்றம் மலை மேல் உள்ள உச்சிப் பிள்ளையார் கோயில் அருகே, எப்போதும் போல கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது. இதையடுத்து திருப்பரங்குன்றம் மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்ற உயர் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டும் எந்த ஏற்பாடுகளும் செய்யவில்லை என தனி நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் முன்பு மனுதாரர் ராம ரவிக்குமார் முறையீடு செய்தார். இந்த வழக்கு அவசரமாக விசாரிக்கப்பட்டது. நீதிபதி, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கப்படும் என்று கூறியும், தீபத்தூணில் விளக்கு ஏற்றாத காரணத்தால் பதற்றம் ஏற்பட்டது.



# திருப்பரங்குன்றத்தில் வேட்பாளரை இறக்க

# பாஜக ஸ்கெட்ச்!

இதையடுத்து திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்றக் கோரி, திரண்டிருந்த இந்து முன்னணி கட்சியினர், தடுப்புகளை உடைத்துச் சென்றனர். ஆனால் போலீஸ் அவர்களை அனுமதிக்காத நிலையில் CISF வீரர்களுடன் செல்லுமாறு மனுதாரருக்கு நீதிபதி உத்தரவிட்டார் இப்படிப்பட்ட நிலையில்தான் CISF வீரர்களை அழைத்துக்கொண்டு பல்வேறு இந்து அமைப்பினர் திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற சென்றனர். ஆனால் அவர்களை அனுமதிக்காத போலீஸ் அதிகாரிகள் We're not allowing...We'll face the consequences என்று குறிப்பிட்டனர்.

இந்த விவகாரம் பா.ஜ.க.வுக்கு வலுவான அரசியல் வாய்ப்பாகக் கருதப் படுகிறது. நீதிமன்ற உத்தரவை உள்ளூர் கோவில் அதிகாரிகள் மூலம் மாநில அரசு எதிர்ப்பதாக அக்கட்சித் தலைவர்கள் விமர்சித்துள்ளனர். மேலும், தி.மு.க. ஆட்சிக்கு ஒரே நம்பகமான மாற்று தற்போதைய கூட்டணிதான் என இந்து வாக்காளர்களுக்கு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மறுபுறம், தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் இப்போராட்டங் களை மத ரீதியான தூண்டுதல் என்று கண்டித்து, மத விவகாரங்களை அரசியல் மயமாக்குவதற்கு எதிராக எச்சரித்துள்ளன.

அடையாளம் மற்றும் நம்பிக்கை சார்ந்த உணர்வுகள் தீவிரமடைந்துள்ள இச்சூழலில், திருப்பரங்குன்றத்தில் பா.ஜ.க. நேரடியாக அ.தி.மு.க. கூட்டணி வழியாக களமிறங்க முயற்சிக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பழமைவாத மற்றும் மதச் சார்பு வாக்காளர்களிடையே தங்கள் செல்வாக்கைச் சோதித்து, அப்பகுதியின் பாரம்பரிய திராவிட ஆதிக்கத்தை மாற்றியமைப்பதே பா.ஜ.க.வின் நோக்கம் என்றும் கூறப்படுகிறது. முக்கியமாக பாஜக இந்த விவகாரத்தை தீவிரமாக கையில் எடுத்துள்ளது.

◆ மணிகண்டன்

# திமுகவிடம் நான் எதையும் கேட்கவில்லை!

## கேட்டால் சைக்கிள் கூட கிடைக்காது!



## நாஞ்சில் சம்பத் ஓபன் டாக்!

எந்த பரிந்துரைக்கும் நான் திமுகவிடம் போய் கேட்கவில்லை, அப்படியே கேட்டாலும் ஒரு சைக்கிள் கூட கிடைக்காது என தவெகவில் இணைந்த நாஞ்சில் சம்பத் தெரிவித்தார். திராவிட பேச்சாளரான நாஞ்சில் சம்பத், தவெகவில் இணைந்துள்ளார். அவர் செய்தியாளர்கள சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில் நான் உங்கள் ஃபேன் என விஜய் கூறியதும் எனக்கு மெய்சிலிர்த்துப் போனேன்.

கடந்த 6 ஆண்டுகளாக நான் எந்த கட்சியிலும் இல்லை. பெரியார், அண்ணா லட்சியங்களை பேசி வந்த நான் இன்று தவெகவில் இணைந்துள்ளேன். நாடு முழுவதும் பரப்புரை செய்ய விஜய் எனக்கு அனுமதி தந்துள்ளார். திமுக ஆதரவாளராக இருந்த என்னை ஒரு விழாவில் கரு பழனியப்பன் விமர்சித்தார். அது போல் தி.க. வீரமணியும் என்னை மேடையில் ஒரு மாதிரி பேசிவிட்டார். மேலும் ஒரு டிவி டிபேட்டில் விஜய் சரியான பாதையில் பயணிக்கிறாரா என கேட்டனர். அதற்கு ஆம் என்றேன். அது முதல் எனக்கு அறிவாயலத்தில் இருந்து பிரச்சனைகள் வந்தன.

என்னை திமுகவினர் வசைபாடி வந்தார். திமுக நடத்திய அறிவுத் திருவிழாவில் வேண்டுமென்றே என்னை தவிர்த்தார்கள். நான் திமுகவிடம் எதையும் கேட்டு நின்றதில்லை. அப்படியே கேட்டாலும் சைக்கிள் கூட கிடைக்காது என்றார்.

கூகுள் அல்காரிதமே விஜய்க்கு சாதகமாக உள்ளது. விஜய்யின் ஒரு வீடியோவை பார்த்தால் அந்த வீடியோ முடியும் போது இன்னொரு விஜய் வீடியோ பரிந்துரைக்கப்படுகிறது. விஜய்க்கு மிகப்பெரிய பிளஸ் இணையம். விஜய் கட்சியின் சின்னம் அறிவிக்கப்பட்டால் அடுத்த ஒரே நிமிடத்தில் தமிழ்நாடு முழுவதும் தெரிந்துவிடும்.. அசுரத்தனமாக செயல்படும் இளைஞர்கள் கூட்டம்..!

*2026* சட்டமன்றத் தேர்தலின் மிக முக்கியமான புள்ளி குறித்து அரசியல் ஆய்வாளர் திரு. பெருமாள்மணி கூறும்போது, முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், நடிகர் விஜய்யுடன் இணைந்த புகைப்படம் இந்த தேர்தலின் மிக முக்கியமான புள்ளி என திடமாக தெரிவிக்கிறார்.

கடந்த பத்தாண்டுகளாகத் தமிழக அரசியலை கூர்ந்து கவனித்து வருவதாகவும், இதில் விஜய்யின் அரசியல் வருகை மிக முக்கியமானது என்றும் அவர் கருதுகிறார். ஜெயலலிதா மற்றும் கருணாநிதி காலத்தில் புதிய சக்திகள் எழுந்தாலும், அவர்களது அரசியல் புரிதல் வேறு; ஆனால், தற்போது களத்தில் இருக்கும் எடப்பாடி பழனிசாமி மற்றும் மு.க. ஸ்டாலின் ஆகிய இருவரும் திரை பின்புலம் இல்லாத தலைவர்கள் என்பதால், திரை ஆளுமை கொண்ட ஒரு நபர் அரசியல் களத்தில் நுழைவது தமிழக அரசியலில் ஒரு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்கிறார்.

நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவதாக அறிவித்தபோதும் இதே அதிர்ச்சி இருந்தது. ஆனால், அவர் களத்தின் யதார்த்தத்தை புரிந்துகொண்டு பின் வாங்கினார். திரை கவர்ச்சி மட்டும் வாக்குச்சாவடியில் வெற்றியை தராது என்பதை ரஜினி உணர்ந்தார். ஆனால், விஜய்யின் நிலை வேறு என்கிறார் பெருமாள்மணி. எந்த தலைவர்களின் காலகட்டத்தில் அரசியல் நடக்கிறது என்பதை பொறுத்துதான் முடிவுகள் அமையும். அரசியலில் வெற்றிபெற, வெறும் கையுடன் வந்து, மக்கள் மீது நம்பிக்கை வைத்து, முடிவு வரும் வரை எந்தவிதமான முன்முடிவுக்கும் வராமல் பொறுமையுடன் இருக்க வேண்டும். இந்த உறுதிப்பாடு விஜய்க்கு இருப்பதாக கருதுகிறார். அவர் நிதானமாக காத்திருந்து சரியான நிர்வாகிகளை, குறிப்பாக செங்கோட்டையன் போன்ற அனுபவமிக்க

# விஜய்-கு துணை நிற்கும் கூகுள்



நபரை சரியான நேரத்தில் இணைத்து கொண்டது, விஜய்யின் நீண்ட கால அரசியல் திட்டத்தை காட்டுவதாக சுட்டிக் காட்டுகிறார்.

அதிமுக, திமுக ஆகிய இரு திராவிட கட்சிகளுக்கும் மாற்று என்று கூறியே புதியவர்கள் வர முடியும். ஏனெனில், 1977 முதல் 2021 வரையிலான 11 தேர்தல்களில், வெற்றி பெற்ற கட்சிக்கு அடுத்த இடத்தில் தோல்வியுற்ற கட்சியே வந்துள்ளது. அதாவது, முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பிக்ஸ் ஆகியுள்ளது. இருப்பினும், அண்ணா காலத்தில் பொதுக்கூட்டங்கள், ஜெயலலிதா கலைஞர் காலத்தில் தொலைக்காட்சிகள் ஆதிக்கம் செலுத்தியது போல, இப்போது இணைய காலம் ஆதிக்கம் செலுத்துகிறது.

திரை கவர்ச்சியுடன் வரும் ஒரு நடிகர், இணைய காலத்தின் வீச்சை சாதகமாக்கிக் கொள்கிறார். மேலும், சித்தாந்த அரசியல் பேசியவர்கள் வாக்கு வங்கியாக மாறாத நிலையில், நாம் தமிழர் கட்சி சீமான் போன்றவர்கள் வெறும் கட்டமைப்புகள் இல்லாமல் ஒன்பது சதவீதம் வரை தனித்து நின்று வாக்குகளை பெற்றிருப்பதும், இந்த இருபெரும் கழகங்களின் கட்டமைப்பு பலம் சிதைவதையே காட்டுவதாக கூறுகிறார்.

விஜய்யின் அரசியல் வருகையால் தமிழக அரசியல் களத்தில் ஒரு புதிய போக்கு ஏற்பட்டுள்ளது. 11-ம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவர்களும் பெண்களும் கூட இப்போது அரசியலை பேச தொடங்கியுள்ளனர். இதற்கு இணையதளத்தின் வீச்சும், புதிய தலைமுறைக்கு அவர் கொண்டு சேர்க்கும் கருத்துகளுமே காரணம். விஜய்யின் அரசியல் விமர்சனங்கள் இனி வெறும் செய்தித்தாள், தொலைக்காட்சி விமர்சனமாக இல்லாமல், கடைசி வாக்காளனையும் சென்று சேரும் வீச்சை பெற்றுள்ளது. இதற்கு முக்கிய காரணம், இணையத்தின் அல்காரிதமே விஜய்க்கு சாதகமாக செயல்படுகிறது. ஒரு வீடியோவை பார்ப்பவர்களுக்கு, அது தொடர்பான அடுத்தடுத்த வீடியோக்களை



இணையம் பரிந்துரை செய்வதன் மூலம் கொள்கை பிரச்சாரமே இல்லாமல் விஜய்யின் அரசியல் பிரசாரம் மக்கள் மத்தியில் சென்று சேருவதாக பெருமாள்மணி கூறுகிறார்.

விஜய், தன்னுடைய பலவீனத்தையே பலமாக மாற்றும் வகையில், பெரிய பிரகடனங்கள் எதுவும் செய்யாமல் மிகவும் நிதானமாக செயல்படுகிறார். மற்ற கட்சிகளை போல அவர் மாற்று என்று தன்னை முன்னிறுத்தவில்லை. அவர் குறைவான கால அவகாசத்தில் கூட்டணி விஷயத்திலும், தொகுதிப் பங்கீட்டிலும் தனக்கே உரித்தான ஒரு பாதையில் பயணிப்பார் என்றும், மிகவும் வலிமையான ஒரு கூட்டணி கட்டப்படும் என்றும் நம்புகிறார். மேலும், நண்பா, நண்பி, நல்லதே நடக்கும் என்று அவர் விடுக்கும் சைலன்ட் செய்தி, அவர் தன்னுடைய கரிஷ்மா மீது அதீத நம்பிக்கை வைத்திருப்பதை காட்டுகிறது. இந்த புதுமையான அணுகுமுறையும், இணையத்தின் துணையும் 2026 தேர்தலை சுவாரஸ்யமான தேர்தலாக மாற்றும் என அரசியல் ஆய்வாளர் பெருமாள்மணி அவர்கள் விரிவாக எடுத்துரைக்கிறார்.

◆ சிவா (எ) கென்னடி



# மீண்டும் சூடு பிடிக்கும் ராமஜெயம் கொலை வழக்கு!



ராமஜெயம் கொலை வழக்கு மீண்டும் சூடுபிடிக்கிறது; திருச்சியில் உள்ள பிரபல திரையரங்கில் சதி திட்டம் தீட்டப்பட்டதா? என விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருச்சி தொழிலதிபர் ராமஜெயம் கொலை வழக்கு தொடர்பாக பிரபல திரையரங்கில் அதன் உரிமையாளர், பணியாளர்களிடம் டிஐஜி வருண் குமார் 5 மணி நேரம் விசாரணை நடத்தியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. கே.என்.நேருவின் சகோதரரும், தொழிலதிபருமான ராமஜெயம், கடந்த 2012 மார்ச் 29ம் தேதி திருச்சியில் கொலை செய்யப்பட்டார். கொலை நடந்து 13 ஆண்டுகளாகிறது. இது தொடர்பாக சிபிசிஐடி, சிபிஐ போன்ற புலனாய்வு அமைப்புகள் விசாரித்தும் வழக்கில் துப்பு துலங்கவில்லை. குற்றவாளிகளும் கண்டறியப்படவில்லை.

இந்நிலையில் திமுக ஆட்சி அமைந்த நிலையில், ராமஜெயம் கொலை வழக்கை விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைக்க சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. அதன்படி தூத்துக்குடி எஸ்பியாக இருந்த ஜெயக்குமார் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது. ஆனாலும் வழக்கில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இதையடுத்து விசாரணை அதிகாரியாக இருந்த ஜெயக்குமார் மாற்றப்பட்டு அப்போதைய திருச்சி சரக டிஐஜி வருண்குமார், தஞ்சை எஸ்.பி ராஜாராம் ஆகியோரை விசாரணை அதிகாரிகளாக ஐகோர்ட் நியமித்தது. தொடர்ந்து விசாரணை பல்வேறு கோணங்களில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில் டிஐஜி வருண்குமார் தலைமையில் 2 டி.எஸ்.பி.க்கள் மற்றும் போலீசார் கடந்த சில மாதங்களுக்கு முன் பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு சென்று அங்கு அடைக்கப்பட்டுள்ள தண்டனை கைதி சுடலைமுத்துவிடம் விசாரித்தனர். சுடலைமுத்து, திருநெல்வேலி சிப்காட் பகுதியில் நடைபெற்ற கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டவர். ராமஜெயம் கொலை செய்யப்பட்ட காலக்கட்டத்தில் திருச்சி மத்திய சிறையில் தொழிற்பயிற்சிக்காக வந்திருந்தார். அப்போது ராமஜெயம் கொலை தொடர்பாக மற்றொரு கைதியுடன் அவர் பேசியதாக கூறப்படுகிறது. இந்த முக்கிய தகவலின்பேரில் டிஐஜி வருண்குமார் தலைமையிலான போலீசார் பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு சென்று, சுடலைமுத்துவிடம் 3 மணி நேரத்துக்கு மேலாக விசாரணை மேற்கொண்டனர். பின்னர் அவர்கள் திருச்சி, நெல்லை, மதுரை, சென்னை புழல் உள்ளிட்ட மத்திய சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள ரவுடிகளிடம் விசாரணை மேற்கொண்டனர்.

இந்நிலையில் சிபிசிஐடி டிஐஜி வருண்குமார் தலைமையிலான போலீசார் திருச்சி பாலக்கரையில் உள்ள பிரபல தியேட்டருக்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். அங்கு தியேட்டரின் உரிமையாளர் மற்றும் ஊழியர்களிடம் டிஐஜி வருண்குமார் விசாரணை நடத்தினார். ராமஜெயம் கொலை தொடர்பாக இந்த தியேட்டரில் சதி திட்டம் தீட்டப்பட்டதா என்ற கோணத்தில் விசாரணை நடந்ததாக கூறப்படுகிறது. 5 மணி நேர விசாரணைக்கு பின், டிஐஜி மற்றும் குழுவினர் அங்கிருந்து கிளம்பி சென்றனர். ராமஜெயம் கொலை வழக்கு தொடர்பாக திரையரங்கில் விசாரணை நடத்தப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

◆ ஜனனி

# லட்சியம் வெல்லும்



பல்வேறு அரசியல் மற்றும்
சமூக விழிப்புணர்வு
செய்திகளை தாங்கி வெளிவரும்
நமது **லட்சியம் வெல்லும்**
மாத இதழ்
ஒவ்வொரு மாதமும்
உங்கள் இல்லம் தேடி வர

**இப்பொழுதே சந்தாதாரர் ஆகுங்கள்**

ரூபாய் **240** மட்டுமே!
(வருட சந்தா)

சந்தா தொகையினை,
நேரடியாக வங்கி கணக்கிலோ,
DD-யாகவோ அல்லது
G-pay மூலமாகவோ
செலுத்தலாம்

ஆண்டு விழா நிகழ்வில் 10 சந்தாதாரர்களுக்கு
குலுக்கல் முறையில் சிறப்பு பரிசு வழங்கப்படும்

**A/C NAME: LATCHIYAM VELLUM**
**A/C No: 6807683907**
**IFSC : IDIB000C067**
**Indian bank : Trichy crowford branch**
**(current account)**
**Gpay : 9943483046 (LATCHIYAM TV)**

**G-pay Scanner**

2/48சி, சம்பூர்தி காம்ப்ளக்ஸ், 2-வது தளம்,
பொன்னகர், திருச்சி-620001

செல்: **9443852805**



## மன்னிப்பு கேட்ட சூரி

தமிழ் சினிமாவில் சின்ன சின்ன வேலைகள் செய்து, படங்களில் கொஞ்சம் கொஞ்சமாக தலைக்காட்ட ஆரம்பித்து இன்று மக்கள் கொண்டாடும் நாயகனாக வலம் வருகிறார் சூரி.

ஆரம்பத்தில் காமெடி கதாபாத்திரத்தில் நடித்து மக்களின் கவனத்தை பெற்று வந்தவர் இப்போது கதாநாயகனாக உயர்ந்துள்ளார். கடைசியாக சூரி நடிப்பில் மாமன் படம் வெளியாகி இருந்தது, பிரசாந்த் பாண்டிராஜ் இயக்கத்தில் வெளியான இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

மதிமாறன் புகழேந்தி இயக்கத்தில் சூரி தனது அடுத்த படமான மண்டாடி படத்தில் நடித்து வருகிறார். மகிமா நம்பியார் நாயகியாக நடிக்க சுஹால் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

மீனவர்களின் படகு போட்டியை மையமாக வைத்து உருவாகி வரும் இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. சமீபத்தில் ரசிகர்கள் ஒருவர், எங்களது ஊரில் உங்கள் பட படப்பிடிப்பு நடப்பது மகிழ்ச்சி.

இரவுநேர படப்பிடிப்பில் வேடிக்கை பார்க்க வரும் எங்கள் பகுதி மக்களிடம் உங்களது பவுன்சர்கள் கொஞ்சம் கடுமையாக நடந்து கொள்கிறார்கள் என பதிவிட்டு இருந்தார். அந்த பதிவிற்கு நடிகர் சூரி, தம்பி, உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் மனமார்ந்த நன்றி. படப்பிடிப்பில் ஏற்பட்ட தவறுக்கு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம்.

இதை தயாரிப்புக் குழுவிடமும், பவுன்சர்ஸ் சகோதரர்களிடமும் தெரிவித்து இனி மிகுந்த கவனத்துடன் இருக்கச் சொல்கிறோம், எப்போதும் போல உங்கள் அன்பே எங்களுக்கு பலம், மீண்டும் நன்றி என பதிவு செய்துள்ளார்.



# அசுர வசூல்..

## ரூ.100 கோடியை கடந்த தனுஷின் 'தேரே இஷக் மெய்ன்'

பாலிவுட்டில் 'ராஞ்சனா' மற்றும் 'அட்ராங்கி ரே' போன்ற படங்களை இயக்கிய பிரபல பாலிவுட் இயக்குனர் ஆனந்த் எல் ராய்யின் படத்தில் தனுஷ் நடித்துள்ளார்.

பாலிவுட்டில் இயக்குனர் ஆனந்த் எல் ராய் இயக்கத்தில் தனுஷ், சோனம் கபூர் நடிப்பில் கடந்த 2013 இல் வெளியாகி வரவேற்பை பெற்ற படம் 'ராஞ்சனா'. தமிழில் அம்பிகாபதி என்ற பெயரில் வெளியானது. படத்தில் ஏஆர் ரகுமான் இசையில் இடம்பெற்ற ஒவ்வொரு பாடலும் ஒரு கிளாசிக்.

இந்நிலையில் தனுஷ் - ஆனந்த் எல் ராய் - ஏஆர் ரகுமான் கூட்டணியில் புதிதாக உருவாகி உள்ள படம் 'தேரே இஸ்க் மேன்'

இதுவும் ராஞ்சனா போலவே காதல் படமாக அமைந்துள்ளது. இந்த படத்தில் தனுசுக்கு ஜோடியாக பிரபல பாலிவுட் நடிகை கிரித்தி சனோன் நடித்துள்ளார்.

இந்நிலையில், 'தேரே இஷக் மெய்ன்' படம் 7 நாட்களில் உலகளவில் ரூ.118.76 கோடி வசூல் செய்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருவதால் வரும் நாட்களில் வசூல் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

# லட்சியம் சினிமா செய்திகள்

- விக்டர்




## ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் புதிய படம்

இசையமைப்பாளரும் நடிகருமான ஜிவி பிரகாஷ்-ன் அடுத்த படத்தை அறிமுக இயக்குனரான மரியா ராஜா இளஞ்செழியன் இயக்குகிறார். அவர் பிரதீப் ரங்கநாதனின் 'லவ் டுடே' படத்தில் உதவி இயக்குநராக பணியாற்றியவர்.

இந்தப் படத்தில் ஜிவி பிரகாஷ்-க்கு ஜோடியாக ஸ்ரீ கௌரி பிரியா நடிக்கிறார். மேலும் இந்த படத்தின் மூலம் 11 வருடங்களுக்குப் பிறகு தமிழ் சினிமாவிற்கு அப்பாஸ் கம்பேக் கொடுக்கிறார். இந்த படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார்.

மேலும் இப்படத்தை பியாண்ட் பிக்சர்ஸ் (Beyond Pictures) நிறுவனம் தயாரிக்கிறது.

இந்நிலையில் இந்த படத்தின் டைட்டில் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. படத்திற்கு ஹேப்பி ராஜ் என பெயரிடப்பட்டுள்ளது. இப்படம் ஒரு ரொமாண்டிக் காமெடி படமாக இருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

## விரைவில்... கார்த்தியின் வா வாத்தியார்

நலன் குமாரசாமி இயக்கத்தில் 'வா வாத்தியார்' படத்தில் நடித்து முடித்துள்ளார் கார்த்தி. கதாநாயகியாக கீர்த்தி ஷெட்டி நடித்துள்ளார். இவர் தமிழில் எல்ஐகே, ஜீனி ஆகிய படங்களில் நடித்துள்ளார்.

கார்த்தியின் 26-வது படத்தை ஸ்டூடியோ கிரீன் நிறுவனம் தயாரிக்க சந்தோஷ் நாராயணன் இசையமைத்து உள்ளார். சத்யராஜ் இப்படத்தில் வில்லனாக நடித்துள்ளார். மேலும் நடிகர் ராஜ் கிரண் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

'வா வாத்தியார்' திரைப்படம் நேற்று உலகம் முழுவதும் வெளியாகும் என படக்குழு அறிவித்து இருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் நேற்று வெளியாகவில்லை.



மமிதா பாஜு - டியூட்

# மாம்பழம் சின்னம் முடக்கப்படும்

## தேர்தல் ஆணையம் கண்டிப்பு

பாம.க.வில் இரு தரப்புக்கும் இடையே தொடர்ந்து மோதல் நீடித்தால் கட்சியின் மாம்பழம் சின்னம் முடக்கப்படும் என தில்லி உயர்நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் பதிலளித்துள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸுக்கும் அவரது மகன் அன்புமணிக்கும் இடையே மோதல் இருந்து வருகிறது. பாமகவில் இருந்து அன்புமணி நீக்கப்பட்டதாக ராமதாஸ் கூறிய நிலையில், பாமகவின் தலைவர் நான்தான் என அன்புமணி கூறி வந்தார்.

தொடர்ந்து இரு தரப்புக்கும் இடையே மோதல் வலுத்து வந்த நிலையில் இந்த விவகாரம் தேர்தல் ஆணையத்துக்குச் சென்றது. அதில், ஆவணங்களின்படி அன்புமணிதான் பாமகவின் தலைவர் என்று தேர்தல் ஆணையம் கூறியது.

பா.ம.க., தலைவராக ராமதாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டதை அங்கீகரிக்க வேண்டும் என, பா.ம.க., - எம்.எல்.ஏ.,க்கள் ஜி.கே.மணி, அருள் உள்ளிட்டோர் அளித்த மனுவை, தலைமை தேர்தல் கமிஷன் நிராகரித்துள்ளது. அதேநேரம், பா.ம.க., தலைவராக, வரும் 2026ம் ஆண்டு ஆகஸ்ட் வரை அன்புமணி தொடர்வார் என்ற பொதுக்குழு தீர்மானத்தை, தேர்தல் கமிஷன் அங்கீகரித்துள்ளது. அதனால், பா.ம.க., பெயர், கொடி, சின்னம் ஆகியவை, அன்புமணி தலைமையிலான கட்சிக்கு சொந்தமாகியுள்ளன.

இதை எதிர்த்து, ராமதாஸ் தரப்பில், டில்லி ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது அன்புமணி, ராமதாஸ் ஆகிய இருதரப்பு தனது வாதங்களை முன்வைத்தது. இதற்கு பதில் அளித்து தேர்தல் கமிஷன் கூறியதாவது:

பாமகவில் தலைமை பிரச்னை உருவாகி உள்ளது. அதனால் சின்னம் ஒதுக்க முடியாது. அன்புமணிக்கோ, ராமதாஸ் தரப்புக்கோ பாமக சின்னத்தை ஒதுக்க முடியாது. இருதரப்புக்கு இடையே பிரச்னை நீடித்தால், பாமகவின் மாம்பழம் சின்னம் முடக்கி வைக்கப்படும்.

இருதரப்பும் பிரச்னைக்குரியதாக இருந்தால் தேர்தல் கமிஷன் படிவம் ஏ மற்றும் படிவம் பி.,யில் இரு தரப்பு கையெழுத்து போடுவதை ஏற்காமல் சின்னமும் முடக்கி வைக்கப்படும். விண்ணப்பங்களில் இரண்டு தரப்புமே பிரச்னை முடியும் வரை கையெப்பமிட்டு தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பிப்பது ஏற்க முடியாது.

எனவே கட்சியின் சின்னத்தை முடக்கி வைப்பது தான் ஒரே வழியாக இருக்கும். எங்களிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் தான் அன்புமணி பாமக தலைவராக ஏற்கிறோம். இதில் பிரச்னை இருக்கிறது என்றால் உரிமையியல் நீதிமன்றத்தை நாடலாம். இவ்வாறு தேர்தல் கமிஷன் கூறியுள்ளது.

◆ சதீஷ்குமார்







# இந்தியாவின் எரிபொருள் வழங்குநராக ரஷியா எப்போதும் விளங்கும்: அதிபர் புதின்

ரஷியா, எப்போதுமே, இந்தியாவின் எரிபொருள் வழங்குநராக விளங்கும் என்று ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் தெரிவித்துள்ளார்.

மேலும், வேகமாக வளர்ந்து வரும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு, நிலையான, தடையற்ற எரிபொருள் வழங்குநராக ரஷ்யா எப்போதும் நீடிக்கும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், இரண்டு நாள்கள் அரசு முறைப் பயணமாக வியாழக்கிழமை மாலை தில்லி வந்தார். அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தலைநகர் புதுதில்லியில் உள்ள ஹைதராபாத் இல்ல அரங்கில் வெள்ளிக்கிழமை காலை பிரமாண்ட வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது, பின்னர், இரு தலைவர்கள், இரு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் 23-ஆவது ஆண்டு மாநாடு நடைபெற்றது.

பிறகு, செய்தியாளர்களை, இரு தலைவர்களும் கூட்டாக சந்தித்துப் பேசினர். புதின் பேசுகையில், இரு நாடுகளும், எரிபொருள் தேவையில் மிகவும் வெற்றிகரமாக கூட்டாளிகளாக உள்ளோம். வளர்ந்து வரும் இந்தியாவின் எரிபொருள் தேவையில் எண்ணெய், எரிவாயு, நிலக்கரி என அனைத்தையும் ரஷியா தடையின்றி வழங்கி வருகிறது. வளர்ந்து வரும் இந்தியாவுக்கு தடையின்றி எரிபொருள்களை வழங்கவும் முனைப்போடு இருக்கிறோம் என்றார்.

இரு நாடுகளின் ஒத்துழைப்பில், ஏற்கனவே, ஆணு சக்தி ஆலைப் பணிகள் செயல்பாட்டில் உள்ளது. இந்தியாவில் மிகப்பெரிய அணு சக்தி ஆலையைக் கட்டமைக்கும் பணியில் ரஷ்யா தொடங்கியிருக்கிறது.

இரு நாடுகளும் இணைந்து சிறிய மாடுலர் உலைகள் மற்றும் மிதக்கும் அணு மின் நிலையங்களின் கட்டுமானம் மற்றும், அணு தொழில்நுட்பங்களின் ஆற்றல் அல்லாத பயன்பாடுகள், உதாரணமாக மருத்துவம், விவசாயத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

◆ சேதுராமன்



# கொங்கு மண்டலத்தில் கிங் மேக்கர் யார்?

**பரபரப்பாகும் அரசியல் களம்**

வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் வெற்றியை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்க போகிறது கொங்கு மண்டலம். 68 தொகுதிகள் கொண்ட கொங்கு மண்டலத்தை வென்றால் கோட்டையைப் பிடித்து விடலாம் என்பது தான் அதிமுக -திமுக -தவெகவின் எண்ணம். இதற்காக களத்தில் இறங்கி இருக்கின்றனர் கொங்கு மண்டலத்தின் முக்கிய தளபதிகளான செங்கோட்டையன், எஸ்.பி வேலுமணி, செந்தில் பாலாஜி ஆகியோர். இதில் யாருக்கு வெற்றி கிடைக்கப் போகிறது? என்பதுதான் கொங்கு மண்டலத்தில் பேசுபொருளாக இருக்கிறது.

கொங்கு மண்டலத்தை கைப்பற்ற வேண்டும் என்ற இலக்குடன் அதிமுக, திமுக, பாஜக உள்ளிட்ட முக்கியக் கட்சிகள் தீவிரமான தேர்தல் வியூகங்களில் இறங்கியுள்ளன. இந்த போட்டிக்குள் தற்போது தவெக-வும் நுழைந்துள்ளது.

நடிகர் விஜயின் அணியில் சேர்ந்த செங்கோட்டையன் கொங்கு பகுதிக்கு வருகை தந்ததும், இப்பகுதியில் அரசியல் சூழல் மீண்டும் சூடுபிடித்துள்ளது. காரணம் கொங்கு மண்டலத்தில் வெற்றி பெற்றால் கோட்டையை பிடித்து விடலாம் என்பது தான்.

காரணம் கொங்கு மண்டலம் எனப்படும் கோவை, திருப்பூர், நாமக்கல், ஈரோடு, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் மொத்தம் 68 தொகுதிகள் உள்ளன. கடந்த 2021 தேர்தலில் அதிமுக-பாஜக கூட்டணி

இங்குள்ள 44 தொகுதிகளை வென்றது. கரூர் மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளைத் தவிர, பெரும்பாலும் அனைத்து மாவட்டங்களிலும் இதே நிலை தான் நீடித்தது. தற்போது மட்டுமல்ல எம்ஜிஆர் காலத்திலிருந்தே கொங்கு பகுதி அதிமுக-வின் ஆதரவு தளமாக இருந்துள்ளது. திரையுலக கவர்ச்சி அதிமுகவின் ஆதிக்கத்திற்கு முக்கிய காரணம் என மட்டும் சொல்லி விட முடியாது.

இதற்கிடையே 1998ஆம் ஆண்டு கோவை குண்டுவெடிப்பு சம்பவத்திற்குப் பிறகு, கோவை மற்றும் அண்டை மாவட்டங்களில் பாஜகவின் செல்வாக்கு உயர்ந்தது. இந்த நிலையை பயன்படுத்திக் கொண்டே பாஜகவும் தனது கட்சி வலிமையை சி.பி.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் மூலம் இங்கு கட்டியெழுப்பத் தொடங்கியது. தற்போது தங்கள் சொந்த பகுதியைச் சேர்ந்த அண்ணாமலை தலைவர் ஆனதாலும் பாஜக கொங்கில் அதிக ஊக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. அதனால் ‘செங்கோட்டையன் வந்தாலும் கவலை இல்லை‘ என்ற மனநிலையில் பாஜக-அதிமுக கூட்டணி செயல்படுகிறது.

அதே சமயம் விஜய்க்கும் கொங்கு மண்டலத்தில் ஒரு நிலையான ரசிகர் ஆதரவு வட்டம் இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் மதிப்பிடுகின்றன. இந்த ஆதரவை அரசியலாக்கும் பணியை செங்கோட்டையன் முன்னெடுத்து வருகிறார். தன்னை புறக்கணித்த பழனிசாமிக்கு பாடம் புகட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் கொங்கு மண்டலத்தில் தவெக வளர்ச்சிக்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்கி உள்ளார். இதற்காகவே சில மாவட்டங்கள் முழுமையாக அவருக்கு ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இந்நிலையில் திமுகவும் கொங்கு மண்டலத்தை நோக்கி வேகமான நகர்வுகளைத் தொடங்கியுள்ளது. கடந்த முறை கரூரில் 4 தொகுதிகளையும் வெற்றி கொண்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, இம்முறை கோவையை குறிவைத்து செயல்படுகின்றது. அதற்காகவே ’அரசியல் ஆக்சன் கிங்’ என்று அழைக்கப்படும் செந்தில்பாலாஜியை கோவையில் தங்கவைத்து, அவருக்கு துணையாக அமைச்சர் சக்கரபாணியை அனுப்பி வைத்துள்ளது. மற்ற கட்சிகளில் சிறப்பாக செயல்படும் தளபதிகளை அடையாளம் கண்டு திமுகவில் சேர்க்கும் பணிகளை செந்தில்பாலாஜி தொடங்கி உள்ளார். இதன் ஓர் எடுத்துக்காட்டு சிங்காநல்லூர் அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ சின்னசாமி திமுகவில் இணைந்தது.

அதிமுக தரப்பில் எஸ்.பி. வேலுமணி மீண்டும் பத்துக்கு பத்து வெற்றி கோவையில் கிடைக்க வேண்டும் என்று உறுதியாக செயல்படுகிறார். பாஜக கூட்டணியில் திரும்பியதாலும், இரு கட்சிகளும் கொங்கில் வெற்றியை நிச்சயம் கைப்பற்ற முடியும் என்ற நம்பிக்கையில் உள்ளன.

மொத்தத்தில், செந்தில்பாலாஜி, எஸ்.பி.வேலுமணி, செங்கோட்டையன் என்ற மூன்று முக்கிய தளபதிகள் கொங்கு மண்டலத்தில் தங்கள் கட்சிகளை வெற்றிக்குச் இட்டுச் செல்ல வழி வகுக்க முயன்று வருகின்றனர். இவர்கள் அனைவருமே அதிமுகவில் அண்ணன் தம்பிகளாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கொங்கு கோட்டையில் கொடி நாட்டப் போகும் ’கிங்’ யார் என்பதே தற்போது அரசியல் வட்டாரங்களில் மிகப்பெரிய கேள்வியாக மாறியுள்ளது.

◆ சதீஷ்குமார்

திருப்பரங்குன்றம் பிரச்சினையில் தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தும் ஜி.ஆர்.சுவாமிநாதனை நீதிபதி பதவியில் இருந்து நீக்குவதற்கு இம்பீச்மெண்ட் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இண்டியா கூட்டணி கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறோம் என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருப்பரங்குன்றத்தில் கலவரம் ஏற்படாமல் தடுத்து அமைதியை நிலைநாட்டிய தமிழ்நாடு அரசுக்கும், கலவரத்தில் ஈடுபட்ட பயங்கரவாதிகளின் ஆத்திரமூட்டலுக்கு இடம் கொடுக்காமல் மத நல்லிணக்கத்தைக் காப்பாற்றிய திருப்பரங்குன்றம் பொதுமக்கள் அனைவருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருப்பரங்குன்றத்தில் மதக் கலவரத்தை ஏற்படுத்தும் விதமாகப் பயங்கரவாதிகள் தொடர்ந்து வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தனர். வழக்கமாக கார்த்திகை தீபம் ஏற்றும் இடத்தை விட்டு விட்டு, வரலாற்று ஆதாரங்களுக்கு மாறாக வேறு ஒரு இடத்தில் தீபம் ஏற்றுவதற்கு முயற்சித்தார்கள். அவர்களது ஆத்திரமூட்டலுக்கு இடம் கொடுக்காமல் வழக்கமான இடத்தில் தீபம் ஏற்றி சுமுகமான முறையில் தீபத் திருவிழாவை தமிழ்நாடு அரசு நடத்தியது.

இந்நிலையில் அங்கு ஒரு கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு வெளியூர்களில் இருந்து வந்த சனாதன பயங்கரவாதக் கும்பல் அங்கு பாதுகாப்புக்கு இருந்த காவல்துறை அதிகாரிகளைத் தாக்கிக் காயப்படுத்தியதோடு பொதுச் சொத்துகளையும் நாசப்படுத்தியது. கலவரத்தில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை



### நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை

# பதவி நீக்கம் செய்ய வேண்டும்

### திருமாவளவன் கோரிக்கை!

யுஏபிஏ சட்டத்தில் கைது செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

திருப்பரங்குன்றத்துக்கு வெளியூர்களிலிருந்து வந்து கலவரத்தில் ஈடுபட்ட பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார்.

கார்த்திகை தீபம் ஏற்றும் நிகழ்ச்சி அமைதியாக நடந்து முடிந்த நிலையில் அங்கு வன்முறையைத் தூண்டும் விதமாக தீபம் ஏற்றுவதற்குப் பயங்கரவாதிகளை அனுமதித்தது மட்டுமின்றி அவர்களுக்குத் துணையாக உயர் நீதிமன்றப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் சிஐஎஸ்எஃப் வீரர்களை அனுப்பியுள்ளார். இது அப்பட்டமான அதிகார மீறல் மட்டுமின்றி அரசமைப்புச் சட்டத்துக்கும், வழிபாட்டுத் தலங்கள் ( சிறப்பு விதிகள் ) சட்டம் 1991 க்கும் எதிரானதாகும்.

இப்படி சட்டத்துக்கு எதிராக செயல்பட்டதோடு, நேற்று முழுவதும் மதுரை, திருப்பரங்குன்றம் பகுதிகளில் தேவையில்லாத சமூகப் பதற்றத்தை ஏற்படுத்தியதோடு, மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க முயற்சித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் மீது சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

திருப்பரங்குன்றம் பிரச்சினையில் மட்டுமல்லாது பல்வேறு பிரச்சனைகளிலும் பொது அமைதியை சீர்குலைக்கும் விதமாகத் தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தும் ஜி.ஆர்.சுவாமிநாதனை நீதிபதி பதவியில் இருந்து நீக்குவதற்கு இம்பீச்மெண்ட் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இண்டியா கூட்டணி கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

■ -ஏ.பொ.சுதாகர்

## சேறும் சகதியுமான சாலை சீரமைக்கப்படுமா?



கண்ணமங்கலம் அருகில் உள்ள மேல்நகர் பாளைய ஏகாம்பரநல்லூர் செல்லும் சாலை சமீபத்தில் பெய்த மழையால் ஆங்காங்கே சேதமாகி குண்டும் குழியுமாக, சேறும் சகதியுமாக மாறி வாகனங்கள் செல்ல முடியாத நிலை உள்ளது. அந்த வழியாகத்தான் தினமும் அரசு பஸ்கள், பள்ளி பஸ்கள் உள்பட எண்ணற்ற வாகனங்கள் சென்று வருகின்றன. பழுதான சாலையை உடனடியாக சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் அப்பகுதி மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

- கல்வி என்பது குழந்தைகளின் அடிப்படை உரிமை
- பள்ளிக்குச் செல்வோம் பல்கலை அறிவோம்
- நாட்டின் வளர்ச்சிக்கு கல்வியே உயிர்நாடி



# காமராஜர் குறித்து சர்ச்சை பேச்சு!

## யூடியூபர் முக்தார் கைது செய்யப்படுவாரா?



தனியார் யூடியூப் சேனலின் நெறியாளர் முக்தார் அகமது, முன்னாள் முதல்வர் கல்விக்கண் தந்த காமராஜரைப் பற்றிய தவறான தகவலை அவதூறாக பேசியதுடன் நாடார் சமுதாய மக்களையும் ஆதாரமில்லாமல் உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிட்டதாக நாடார் அமைப்புகள் கடும் கோபத்தில் இருக்கின்றன. நேரடியாகவே காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளன. யூடியூபர் முக்தார் அகமதுவை கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

தமிழ்நாடு சத்திரிய நாடார் இயக்கத்தின் தலைவர் சந்திரன் ஜெயபால், நெல்லை தூத்துக்குடி நாடார் மகமை பரிபாலன சங்கத்தலைவர் ஆனந்தராஜ், பொதுச்செயலாளர் சந்திரசேகர பாண்டியன், தமிழ்நாடு நாடார் சங்கத்தலைவர் முத்துரமேஷ், தேசிய நாடார் சங்க பொதுச்செயலாளர் விஜயகுமார், திருவான்மியூர் வட்டார நாடார் ஐக்கிய சங்கத்தலைவர் திருப்புகழ், ஆலந்தூர் வட்டார நாடார் ஐக்கிய சங்கத்தலைவர் கணேசன் உள்ளிட்ட ஏராளமானோர் திரண்டு வந்து நேற்று சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் மனு ஒன்றை கொடுத்தனர்.



அந்த புகார் மனுவில் கூறுகையில், சமூக வலைதளங்களில் சில நாட்களாக மறைந்த முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜரின் செயல்திட்டங்களையும், அவர் ஆற்றிய மக்கள் பணியையும் சிதைக்கும் நோக்கத்தில் திட்டமிட்டு அவதூறு தகவல்கள் தொடர்ந்து வந்தவண்ணம் உள்ளது. காமராஜர் கட்டிய அணைகள் ஓட்டை விழுந்து பயனற்றவை என்றும், அவரது அரசு நிர்வாகத்தில் ஊழல் முறைகேடு நடந்ததாகவும் அதனால்தான் 1963-ம் ஆண்டு அவர் முதல்வர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாகவும் பல்வேறு அவதூறு கருத்துகள் பரப்பப் படுகிறது.

இதுபோன்ற அவதூறு கருத்துகள் மூலம் தமிழ்நாட்டில் சாதிய, மத மோதல்களை உருவாக்கி

சட்டம்-ஒழுங்கை சீர்குலைக்கும் முயற்சிகள் நடக்கிறது. இதற்கு முக்கிய காரணமான நபர்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த புகார் மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த புகார் மனு குறித்து உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு 'சைபர்' கிரைம் போலீசாருக்கு உத்தரவிடப் பட்டு உள்ளது.

# நாடார் அமைப்புகள் ஆவேசம்

நாடார் மஹாஜன சங்க பொதுச் செயலாளர் கரிக்கோல்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறுகையில், 'பொது வாழ்க்கைக்கு வந்ததிலிருந்தே தன்னைப் பெற்ற தாயைக்கூட கவனிக்காமல் காந்திய வழியில் தாய்நாட்டைப் பற்றி மட்டுமே சதா சிந்தித்து செயல்பட்டு வந்த காமராஜரை தனது சாதி பாசத்தால் செயல்பட்டு தான் சார்ந்துள்ள சாதியினருக்கு சலுகைகள் வழங்கினார் என்று எள்ளளவுகூட உண்மையில்லாத அபாண்டமான பழியினை பெருந்தலைவர் மீது சுமத்துவது போன்று சமீபகாலமாக திரைப்படங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் பெருந்தலைவரைப் பற்றி அவதூறான செய்திகள் திட்டமிட்டே பரப்பப்பட்டு வருகிறது.

சமீபத்தில் தனியார் யூடியூப் சேனலின் நெறியாளர் முக்தார் அகமது தமிழ்நாட்டின் பொற்கால ஆட்சி நடத்திய முன்னாள் முதல்வர் கல்விக்கண் தந்த காமராஜரைப் பற்றிய தவறான தகவலை அவதூறாக பேசியதுடன் நாடார் சமுதாய மக்களையும் ஆதாரமில்லாமல் உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிட்டுள்ளார். இது சாதிய தீண்டல் வன்கொடுமையாகும்.

எனவே, அவர் வெளியிட்ட பதிவிற்கு எங்களது கடுமையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். முக்தார் அகமதுவை கைது செய்து அவர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுத்தால் மட்டுமே அவரைப்போன்று சாதி துவேசங்கள் செய்து, சமூகத்தில் அமைதியை குலைத்து சுயலாபம் அடைய நினைக்கும் மனிதத்தன்மையற்ற நபர்களின் செயல்களை தடுத்து நிறுத்த முடியும். தமிழ்நாட்டில் சாதி துவேசங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் முக்தார் அகமது மீது சட்டப்படியான கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் தமிழ்நாடு முதல்-அமைச்சரை கேட்டுக்கொள்கிறோம்' இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

◆ சுரேஷ் ஆப்ரகாம்

# தேங்கும் மழைநீரால் பொதுமக்கள் அவதி



திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மேல்பாக்கம் -கண்ணம்பாளையம் சாலையை ஏராளமான வாகன ஓட்டிகள் பயன்படுத்துகிறார்கள். குறிப்பாக ஈஸ்வரன் கோவில் தெருவில் சாலை வசதிகள் முறையாக இல்லை. இதனால் மூத்த குடிமக்கள் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகள் சாலையை கடக்க மிகவும் சிரமம் அடைகிறார்கள். மழைக்காலங்களில் சாலையை பார்ப்பதற்கே நீச்சல் குளம் போல தோற்றமளிக்கிறது. எனவே சாலையை உடனடியாக சீரமைக்க துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.




# அதிகரித்த சாலை விபத்து மரணங்கள்...

இந்தியாவில் சாலை விபத்துகளில் தமிழ்நாடு 2-ஆம் இடத்தில் உள்ளது. விளம்பரத்திற்கு அக்கறை செலுத்தும் முதலமைச்சர் 10 சதவீதமாவது மக்களின் உயிரைக் காக்க அக்கறை செலுத்துவாரா? என கேள்வி எழுப்பி ஆர்.பி உதயகுமார் வீடியோ வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் நடந்து வரும் சாலை விபத்துகளை சுட்டிக் காட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், தமிழகத்தில் ஸ்டாலின் திமுக ஆட்சியில் எங்கு பார்த்தாலும் கருப்பு புள்ளிகள் ஏற்பட்டு வருவதை நாம் பார்த்து வருகிறோம். தற்போது, நம்முடைய கவலையெல்லாம் திமுக ஆட்சியில் தமிழகத்தில் சாலைகள் தோறும் ரத்தக் கரைகள் படிந்து இருப்பதை நாம் என்னவென்று கடந்து செல்வது என்று புரியவில்லை.

தமிழகத்தில் கடந்த 7 நாட்களில் மட்டும் நடைபெற்ற சாலை விபத்தில் 18 பேர் உயிரிழந்த சம்பவம் நமக்கு பேர் அதிர்ச்சி ஏற்படுத்தி இருக்கிறது. தென்காசி அருகே கடந்த நவம்பர் 24-ஆம் தேதி இரு தனியார் பேருந்துகள் மோதிக்கொண்ட விபத்தில் 7 பேர்கள் உயிரிழந்து 70-க்கும் மேற்பட்டோர்கள் காயமடைந்தனர். அதனையடுத்து, சிவகங்கை நடந்த சாலை விபத்தில் 9 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். இதில், 40 மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

## 2வது இடத்தில் தமிழகம்!

திமுக ஆட்சியில் கொள்ளை, கற்பழிப்பு, வழிப்பறி, போதை பொருள் புழக்கம் இவையெல்லாம் தொடர்ந்து நடந்து வந்தாலும், தற்போது அதனுடன், நாள் தவறாமல் சாலை விபத்துகள் நிகழ்வதும் மனித உயிர்கள் பலியாவதும் நமக்கு மிகப்பெரிய வேதனையை ஏற்படுத்துகிறது. இந்த உயிரிழப்புகள் மூலம் அந்த குடும்பத்தினர் அடையும் துயரத்தையும், உயிரிழந்தவர்களை நம்பி

இருக்கும் குடும்பத்தாரின் எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாவதையும் என்னவென்று சொல்வது.

தமிழகத்தில், கடந்த 11 மாதங்களிலே மட்டும் நடந்திருக்கும் சாலை விபத்துகளின் பட்டியலை பார்த்தால் நமக்கு தலை சுற்றுகிறது. ராணிப்பேட்டை அருகே கடந்த ஜனவரி-9 ஆம் தேதி கர்நாடகா அரசு பேருந்து மீது இரு லாரிகள் மோதியதில் 4 பேர் உயிரிழந்தனர். திருவண்ணாமலை மாவட்டத்தில், கடந்த ஏப்ரல் 13-ஆம் தேதி அரசு பேருந்து மோதியதில் காரில் வந்த 4 பேர் உயிரிழந்தனர். திருவள்ளூர் மாவட்டத்தில் மே மாதம் 4-ஆம் தேதி கேரளத்தைச் சேர்ந்த பக்தர்கள் வந்த வேன் மீது அரசு பேருந்து மோதியதில் 4-பேர் உயிரிழந்தனர். திருத்தணி அருகே மே மாதம் 7-ஆம் தேதி அரசு பேருந்து மீது லாரி மோதியதில் 4பேர் உயிரிழந்தார்கள் மேலும் 32 பேருக்கு காயம் ஏற்பட்டது. கரூர் மாவட்டத்தில் கடந்த மே 17ஆம் தேதி ஆம்னி பேருந்து சுற்றுலா வேனும் மோதியதில் 4 பேர் உயிரிழந்து 15 பேர்கள் காயமடைந்தனர். இவையெல்லாம், திமுக ஆட்சியில் இந்தாண்டு நிகழ்ந்த மோசமான சாலை விபத்துகளாகும்.

மேலும், தேசிய நெடுஞ்சாலைகளில் நிகழ்ந்தசாலை விபத்துகளில் 13.7 சதவீதத்துடன் 7,041 பேர் உயிரிழந்து உத்தரப்பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. 10.4 சதவீதத்துடன் 6,258 பேர் உயிரிழந்து தமிழகம் இரண்டாவது இடத்தில் உள்ளது. ஆனாலும், சாலை விபத்து குறித்து முதலமைச்சர் அக்கறை செலுத்தவில்லை. விளம்பரத்திற்கு அக்கறை செலுத்த முதலமைச்சர் 10 சதவீதமாவது மக்கள் உயிரைக் காக்க அக்கறை செலுத்த வேண்டாமா? நேரம் ஒதுக்க வேண்டாமா?

ஸ்டாலின் அவர்களே உங்களின் எதிர்காலம் பற்றி, தேர்தலில் ஆட்சியைப் பிடிப்பதை பற்றி நீங்கள் தொடர்ந்து உங்கள்





கட்சிக்காரர்களுக்கு உத்தரவிடுகிறீர்கள். மக்களிடத்திலே வேண்டுகோள் விடுகிறார்கள். மத்திய அரசுக்கு கடிதம் எழுதுகிறீர்கள். ஆனால், தமிழ்நாட்டு மக்களுடைய உயிர் பறிபோவதை கண்டு உங்களுக்கு பரிதாபம் ஏற்படவில்லையா? கவலையில்லையா?

நீங்கள் மதுரைக்கு வருகீர்கள் என்றால் அதற்காக சாலைகளிலே பன்னீரை தெளித்து உங்களை வரவேற்பதற்கு கட்சி தயாராகிறது ஆனால், இந்த மதுரையில் உள்ள சாலைகளில் சாக்கடைதண்ணீர் தான் ஓடிக்கொண்டிருக்கிறது. மதுரை மக்கள் மீது அக்கறை இருந்தால் விளம்பரத்துக்காக நடத்தப்படும் விழாக்களுக்கு நீங்கள் நேரம் ஒதுக்குறீர்களே? அதில், ஒரு மணி நேரம் ஒதுக்கி மதுரையில் இருக்கிற சாலைகளை ஆய்வு செய்ய முன் வருவீர்களா?

எப்போதும் போல விளம்பர வெளிச்சத்திலே கருப்பு, சிவப்பு கொடியை பறக்க விட்டுக்கொண்டிருக்கிறீர்கள்..! ஆனால், இங்கே ரத்தக்கரைப்படைந்த சாலைகளாக தமிழகம் மாறிக் கொண்டிருக்கிறது. இதற்கு முடிவுரை எழுதுவதற்கு தமிழ்நாட்டு மக்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நீங்கள் அக்கறை உள்ள முதலமைச்சரா? அல்லது விளம்பரம் தேடும் முதலமைச்சரா?என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் என அந்த வீடியோவில் தெரிவித்துள்ளார்.

◆ சின்னதுரை




# விடை காணா விடயங்கள்!



■ சகோ. சிவக்குமார், சென்னை

வங்கி வாடிக்கையாளர்களின் விழிப்புணர்வு குறித்து இப்பதிப்பில் படிக்கலாம்.

'ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'

எனும் குறளை முன்னிறுத்தி இக்கட்டுரையை தொடங்கலாம்.

வங்கியில் நடைபெறும் பண மோசடி குற்றங்கள் குறித்து சிலவற்றை இங்கு அறிவோமாக. குற்றங்கள் வாடிக்கையாளர் மட்டுமே செய்பவை அல்ல. சில வங்கி ஊழியர்களும் அதில் அடங்குவர்.

நீங்கள் வாசித்த குறளின் அர்த்தத்தை நான் விளக்குவதை விட நீங்களாக தேடி கண்டறிய உங்களை வேண்டுகின்றேன்.

காரணம் : இன்று தேடுதல் என்ற அடிப்படை ஆர்வத்தை அறிவு வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமாக அமைக்காமல் எளிதில் விடை தெரிய தொழில்நுட்பத்தை கூகுள் போன்றோ, சேட் ஜி பி டி போன்றோ நாடுகின்றோம். தேடுதல் திறத்தை இழக்கின்றோம். செயற்கை நுண்ணறிவு நம் அறிவை மங்கச் செய்கிறது. இது குறித்து விரிவாக வரும் இதழ்களில் அலசுவோமாக.

என் சிறிய வேண்டுகோள், என் இனிய தமிழ் நெஞ்சங்களுக்கு. கூகுள் சர்ச், சேட் ஜி பி டி உபயோகிக்காமல் ஒருமுறை புத்தகம் மூலம் இக்குறளின் விடை காண வேண்டுகின்றேன். இந்த கட்டுரை நம் விழிப்புணர்வை விரிவாக்க உறுதுணையாக இருக்கும் என்பதை என் எழுத்தாணியின் மேல் அறிவை நிலை நிறுத்தி அன்றாட வாழ்வில் கடந்து வந்த சில அனுபவங்களை உங்கள் அறிவின் அரியணையில் அமர்த்த உங்கள் உத்தரவை நாடுகின்றேன். உத்தரவு வழங்கியவர்கள் என்னோடு இக்கட்டுரையில் உள் நுழையலாம்.

இக்கட்டுரை தொடர் நடந்த உண்மையை உரக்க கூறும் உங்கள் காலடி பணிந்து. யோசிக்க வைக்கும் விறுவிறுப்பு விலகாமல். இதில் எழுதப்படுவது கதை இல்லை. நான் கடந்து வந்த உண்மைச் சம்பவம். என்னிடம் சாட்சியம் இல்லை. அதேபோல் கதைகட்ட வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை.

மக்களின் விழிப்புணர்வுக்காக மட்டுமே இக்கட்டுரையை எழுதுகின்றேன். இக்கட்டுரையில் வாடிக்கையாளர் செய்த மோசடியை குறித்து பார்க்கலாம்.

ஆம், அன்று வங்கியில் எப்பவும் போல வேலைகள் நடந்து கொண்டிருந்தன. வங்கி ஊழியர்களோ அவரவர் வேலைகளை தீவிரமாக செய்து கொண்டிருந்தனர். நானும் எப்பவும் போல வாடிக்கையாளர்களை சந்தித்துக் கொண்டிருந்தேன். அவர்களின் வங்கி தேவைகளுக்கு தீர்வு காண வங்கிக் கிளையின் மேலாளராக என் முழு பணியையும் செய்து கொண்டிருந்தேன்.

அன்று பகல் 11 மணி இருக்கும். என் அறையின் கதவைத் திறந்து பதற்றம் மற்றும் கோபம் ஆட்கொண்டு ஒரு வாடிக்கையாளர் உள்நுழைந்தார்.

நான் அவரை அப்பொழுது தான் முதன்முறையாக சந்திக்கின்றேன் உள்ளே வந்தவர் சற்றே குரலை உயர்த்தி வங்கியில் அவருடைய பணம் 5 லட்சங்கள் திருடப்பட்டுள்ளதாக புகார் தெரிவித்தார். இதற்கு வங்கி தான் பொறுப்பு ஏற்க

வேண்டும். மற்றும் அவருடைய பணம் உடனடியாக திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். இல்லை என்றால் காவல்துறையை நாடுவதாக சாடினார்.

இங்கு என்னோடு பழகிய என்னை விட வங்கிப் பணிகளில் தேர்ச்சி பெற்ற பெருமக்களின் வழிகாட்டுதலை நோக்கி நடை பயின்றேன். அவர்கள் சொல்லிக் கொடுத்தது, இக்கட்டான சூழ்நிலையில் பதறாமல் வேலை செய்ய வேண்டும் என்பது. 'பதறிய காரியம் சிதறும் என்றார்கள்.'

வாடிக்கையாளரை அமர வைத்து, தண்ணீர் கொடுத்து ஆசுவாசப்படுத்தினேன். உங்கள் பணம் எங்கள் வங்கியில் ஏமாற்றப்பட மாட்டாது என்று அவர் அறிவுக்கு ஏற்ப எடுத்துரைத்தேன். அவரின் அஞ்சுதலை அகற்றி நடந்ததை இயல்பாக விவரிக்க, பேச வைக்க கடும் முயற்சி தேவைப்பட்டது. சற்று சமாதானமான வாடிக்கையாளர், அவரின் வங்கி கணக்கு எண்ணை கொடுத்து அவருக்கே தெரியாமல் ஐந்து லட்சம் ரூபாய்கள் பணமாக எடுக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார். நான் அவரின் வங்கிக் கணக்கை ஆராயும் போது அவர் கூறியது உண்மைதான் என்று புலப்பட்டது.

ஆம்.. அவர் கூறிய தேதியில் ஐந்து லட்சம் ரூபாய்கள் பணமாக வங்கியில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. உடனே நான் என் உதவியாளரிடம் குறிப்பிட்ட தேதியில் நடந்த பண பரிவர்த்தனை கொண்ட முழு விவர புத்தகத்தை கொண்டு வரும்படி கூறினேன். அதை ஆராயும் போது வாடிக்கையாளர் சொன்னபடி காசோலை இருந்தது. நான் காசோலையின் நம்பகத்தன்மையை அறிவதற்காக வாடிக்கையாளரின் கையெப்பத்தை சரி பார்த்தேன். அவருடைய கையெப்பம் இல்லை என்று நிச்சயமாக கூற முடியாத அளவிற்கு ஒத்து இருந்தது. எந்த ஒரு தனிநபரின் கையெப்பமும் எப்பவுமே ஒரே மாதிரியாக இருக்காது. ஆனால் கையெப்பத்தின் கீற்று மாறாமல் ஒரே படிவமாக இருக்கும். வங்கிகள் அதன் ஊழியர்களுக்கு கையெப்பத்தை, அதன் கீற்றை ஆராயும் பயிற்சியை கொடுப்பர்.

அந்த குறிப்பிட்ட பணப் பரிவர்த்தனை செய்த அலுவலர் யார் என்று தேடிய போது கிடைத்தது ஒரு தேர்ச்சி பெற்ற பல வருடங்களாக காசாளராக இருப்பவர் என்பது. பிறகு எப்படி இது நடந்திருக்கும் என்ற கேள்வி எனக்குள் எழ ஆரம்பித்தது. அடுத்து வாடிக்கையாளர் கூறியது எனக்கு மேலும் அதிர்ச்சியை உருவாக்கியது. அந்த குறிப்பிட்ட தேதியில் வாடிக்கையாளர் வெளிநாட்டில் இருந்துள்ளார். அதற்கு சம்பந்தப்பட்ட தரவுகளையும் அவர் வழங்கினார்.

என் நிலை : வாடிக்கையாளர் நாட்டிலேயே இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இரண்டாவதாக காசாளர் விவரம் அறிந்த மூத்த வங்கி ஊழியர்.

எளிதாக அவரை அழைத்து இந்த பணப் பரிவர்த்தனை குறித்து வினா எழுப்புவது சரி இல்லை என்பதை தீர்க்கமாக முடிவு செய்தேன். ஒருதலை பட்சமாக யோசிப்பதை தவிர்த்து நடுநிலையில் இருந்து இந்த குறிப்பிட்ட பணப்பரிவர்த்தனை நடந்த விதத்தை அறிய முற்பட்டேன். வாடிக்கையாளரிடம் புகார் மனு பெற்று அதற்கான விசாரணை மேற்கொண்டு ஓரிரு நாட்களில் பதில் அளிப்பதாக எழுதிக் கொடுத்தேன்.

உங்கள் அனைவருக்கும் ஒரு வேண்டுகோள். புகார் மனுவை கொடுத்த பிறகு அதற்கான அத்தாட்சியை தயவு கூர்ந்து வாங்கவும். ஏனெனில் பிறகு சில நாட்கள் கழித்து நீங்கள் புகார் தெரிவிக்கவே இல்லை என்று வங்கி கூற வாய்ப்பு இருக்கிறது . இது எதார்த்த உண்மை.

வாடிக்கையாளர்கள் மிகவும் முக்கிய மானவர்கள். பல வங்கிகள் இருந்தாலும் என் வங்கியை வாடிக்கையாளர் உபயோகப் படுத்துவது எனக்கு, என் வங்கிக்கு ஒரு பெருமை. வாடிக்கையாளரின் நலன் காப்பதே வங்கியின் முழுமுதற் கடமை. பிறகு குறிப்பிட்ட தேதியின் சிசி டிவி காட்சிகளை எடுத்து ஆராய்ந்தேன்.

அதில் கண்டது மிக அதிர்ச்சியாக இருந்தது. ஆம்.வாடிக்கையாளர் அந்த தேதியில் வங்கியில் காசோலை கொடுத்து காசாளர் இடமிருந்து பணம் பெற்றுள்ளார் என்பது தெரியவந்தது. உண்மையில் அதிர்ச்சியாக தான் இருந்தது. ஆனால் அந்த அதிர்ச்சியை நான் வெளிக்காட்ட முடியாது. வெளிக்காட்ட கூடாது. வாடிக்கையாளரின் புகாருக்கு பதில் அளித்தே ஆக வேண்டும்.

இந்த சூழ்நிலையில் நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை சற்றே யோசிக்கவும்.. உங்கள் யோசனைகளை பத்து நிமிடங்கள் மட்டுமே உபயோகப் படுத்துங்கள்.. பிறகு கீழ்க்கண்ட பதிவினை படிக்கவும்.

நான் புகார் கொடுத்த வாடிக்கையாளரின் வீட்டிற்குச் சென்றேன். அவரும் அன்போடு என்னை வீட்டுக்குள் வர அழைத்தார். சூடாக தேநீரும் கொடுத்தார். வாடிக்கையாளரின் இந்த பதற்றமற்ற செயல் அவர் தவறு செய்திருக்க மாட்டார் என்பதை ஓரளவிற்கு உணர்த்தியது . ஆனாலும் அவர் எப்படி வெளிநாட்டில் இருக்கும் தேதியில் இங்கு பணம் பெற்றார் என்பது விவரிக்க முடியாத வலை பின்னலாக என் வழி மறைத்தது.

அப்போதுதான் அவர் வீட்டில் அந்த புகைப்படத்தை பார்த்தேன். அவர் இருவராக ஒரு புகைப்படத்தில் தோன்றினார். நான் விசாரிக்கும் போது தெரியவந்த உண்மை மேலும் அதிர்ச்சியை அளித்தது . அவர்கள் இருவர். இரட்டைக் குழந்தைகளாக பிறந்தவர்கள்.

இந்த ஒரு சிறு ஆதாரம் என் வங்கியின் மற்றும் காசாளரின் ஒழுக்கத்தை நிலை நிறுத்தியது. நான் வாடிக்கை யாளரிடம், ஐயா தாங்கள் தந்துள்ள புகார் மனுவை விசாரித்தேன். விசாரிக்கும் பொழுது, உங்கள் வீட்டில் நீங்கள் இரட்டையர்கள் என்பது தெரியவந்தது. ஆக உங்கள் சகோதரர் இந்த செயலை செய்திருக்க வாய்ப்பு அதிகமாக உள்ளது. ஆனால் நான் உடனடியாக உங்கள் இரட்டையர் மேல் பழி சொல்ல முடியாது. அதற்கு விசாரணை மிகவும் அவசியம். அந்த விசாரணை நடத்த வேண்டிய அங்கீகாரம் எங்களுக்கு இல்லை. எனவே காவல்துறையின் உதவியை நாட இருக்கின்றோம். உங்களுக்கு ஏதாவது கூற இருந்தால் உடனடியாக தெரிவிக்கவும். இல்லாத பட்சத்தில் காவல்துறையை நாங்கள் நாட வேண்டிய நிலைமை கட்டாயமாக்கப்படும் என்றேன்.

அதிர்ந்து போன வாடிக்கையாளர், இதில் உண்மை இருக்க வாய்ப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து ஒரு நாள் அவகாசம் கேட்டார். பிறகு மறுநாள் வங்கிக்கு வந்து என்னை பார்த்தவர் அவர் தந்த புகார் மனுவை திரும்ப பெறுவதாக கூறினார்.

விடயம் என்னவெனில், இவர் வெளிநாட்டில் பணிபுரிந்து இருக்கும் நேரத்தில் இவர் சகோதரர் இவர் ஏற்கனவே கையெப்பம் இட்டு வைத்த காசோலையை உபயோகப்படுத்தி வங்கியில் பணம் பெற்றுள்ளது அவருக்கு தெரியவந்துள்ளது. இது ஆள் மாறாட்ட குற்றமாகும்.

அவர் குடும்பத்தில் இது பெரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்று விளக்கி அவர் தந்த புகாரை நிராகரித்து உதவுமாறு வேண்டினார். பாதிக்கப்பட்டவர் தானாக முன்வந்து புகாரினை திரும்ப பெற்றதால் இந்த புகார் கைவிடப்பட்டது.

நம்மில் நம்மோடு இருப்பவர்களே நம்மை பண விஷயத்தில் ஏமாற்றுவார்கள் என்பதை இந் நிகழ்ச்சி தெளிவு படுத்தியது. எனக்கு தெரிய வந்த தெளிவினை உங்களுக்கு கடத்தவே இக்கட்டுரையை உங்களுக்காக சமர்ப்பிக்கின்றேன். நன்றி.. அடுத்த இதழில் சந்திப்போம்.



## துருபிடித்த மின்பெட்டி சரி செய்யப்படுமா?

சென்னையை அடுத்த தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 40-வது வார்டு, மண்டலம் 3-ல் உள்ள திருவள்ளுவர் தெரு, சிவகாமி நகர் கவுரிவாக்கம் அம்மா குடிநீர் விநியோகம் செய்யும் இடம் உள்ளது. இங்கு குழந்தைகள் முதல் பெரியவர்கள், பெண்கள் என அனைவரும் குடிநீர் பிடிக்க வருகிறார்கள். ஆனால் இந்த பகுதியில் உள்ள மின்சார பெட்டி ஒன்று துருபிடித்து, மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. உயிர்சேதம் ஏற்படும் முன்னர் சம்பந்தப்பட்ட மின்வாரிய அதிகாரிகள் இந்த மின்பெட்டியை சீரமைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தமிழகம் முழுவதும் 126 கிராமங்களில்

# அறிவுசார் மையங்கள்!




திராவிடர், பழங்குடியினத்தைச் சேர்ந்த கிராமப்புற மக்கள் கல்வியறிவு பெறவும், மாணவர்கள், விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையிலும் தமிழகம் முழுவதும் 126 கிராமங்களில் அறிவுசார் மையங்கள் அமைக்கப் படவுள்ளன. இதற்கான அரசாணையை தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை வெளியிட்டு உள்ளது.

கிராமப்புற ஆதிதிராவிட, பழங்குடியினருக்கு அரசின் நலத் திட்டங்களை அறிவித்தல், கல்வி மற்றும் இதர பயனுள்ள தகவல்களை வழங்குதல், விவசாயிகள், மாணவர்கள், சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளித்தல் என்ற அடிப்படையில் இந்த மையங்கள் செயல்படவுள்ளன. இதற்காக தமிழகத்தில் 126 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

கிராம அறிவுசார் மையங்கள் என்ற பெயரில் இதற்கான கட்டடங்கள் மூன்று 'மாதிரிகளில்' கட்டப்படும். தரைத்தளம், முதல் தளத்துடன் கூடிய மையம் 'மாதிரி ஒன்று' என வரையறுக்கப்பட்டுள்ளது. இதேபோல, தரைத்தளத்துடன் கூடிய மையத்துக்கு 'மாதிரி இரண்டு', 'மாதிரி மூன்று' என வரையறுக்கப்பட்டுள்ளது.

மாதிரி ஒன்றுக்கான கட்டடம் ரூ.131.31 லட்சத்தில், 381.16 சதுர மீட்டரில் கட்டப்படுகிறது. மாதிரி இரண்டுக்கான கட்டடம் ரூ.80.23 லட்சத்தில் 203.80 சதுர மீட்டரில் கட்டப்படுகிறது. மாதிரி மூன்றுக்கான கட்டடம் ரூ.36.98 லட்சத்தில் 108.48 சதுர மீட்டரில் கட்டப்படுகிறது.

இந்த மையத்தில் விவசாயிகள், சுய உதவிக்குழுக்களுக்கான பயிற்சி மையம், கணினி அறை, நூலக அறை, நிர்வாக அலுவலகம், ஆலோசனை வழங்கும் அறை, கழிப்பறைகள், குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளும் இடம் பெறவுள்ளன. இதன்படி, மாதிரி ஒன்றில் தலா ரூ.131.31 லட்சம் மதிப்பில் 56 மையங்கள் கட்டப்படவுள்ளன.

மாதிரி இரண்டில் தலா ரூ.80.23 லட்சத்தில் 60 மையங்கள் கட்டப்படவுள்ளன. மாதிரி மூன்றில் தலா ரூ.36.98 லட்சத்தில் 10 மையங்கள் கட்டப்படவுள்ளன.

**நாமக்கல்லில் 24 மையங்கள்:** தமிழகத்தில் அதிகபட்சமாக நாமக்கல் மாவட்டத்தில் 24 மையங்கள் கட்டப்படவுள்ளன. இதற்கு அடுத்தபடியாக திருப்பூர், விருதுநகர் மாவட்டங்களில் தலா 12 மையங்கள் கட்டப்படுகின்றன. சேலத்தில் 10 மையங்களும், கரூர் மாவட்டத்தில் 8, திருவண்ணாமலையில் 7, ஈரோடு மற்றும் கோயம்புத்தூரில் தலா 6, திருச்சி, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தலா 4, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூரில் தலா 3, செங்கல்பட்டு, தென்காசி, விழுப்புரம் மாவட்டங்களில் தலா 2 மையங்கள் கட்டப்படவுள்ளன.


தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், ராணிப்பேட்டை, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவள்ளூர், திருவாரூர், தூத்துக்குடி, பெரம்பலூர், வேலூர், கடலூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் தலா ஒரு மையம் கட்டப்படவுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டத்தில் ஆதிதிராவிடர் காலனி, புதுக்கோட்டை உள்ளூர், அய்யனாபுரம் ஆகிய 3 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

◆ மனோகர்

# கல்லணை கிராமத்தில் மக்களைப் பாதிக்கும் கல்குவாரிகளை அரசு உடனடியாக மூட வேண்டும் - சீமான் ஆவேசம்

துரை மாவட்டம், திருமங்கலம் அருகே கல்லணை, அட்சங்குளம், டி.புதூர் மற்றும் நெடுங்குளம் பகுதிகளில் சட்டத்திற்குப் புறம்பாக 300 அடிக்கும் மேல் ஆழமாகத் தோண்டப்பட்ட 15 கல்குவாரிகள் செயல்பட்டு வரும் நிலையில், புதிதாக 3 கல்குவாரிகளை அமைக்க தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது வன்மையான கண்டனத்துக்குரியதாகும். ஏற்கனவே உள்ள கல்குவாரிகளையே மூட வேண்டும் என்று அப்பகுதி மக்கள் நெடுங்காலமாகப் போராடி வரும் நிலையில், அதனைச் சிறிதும் மதியாது புதிதாக 3 கல்குவாரிகளை அமைக்க திமுக அரசு அனுமதித்துள்ளது எதேச்சதிகாரப்போக்கின் உச்சமாகும்.



திருமங்கலம் பகுதியில் முறைகேடாக இயங்கும் கல்குவாரிகளால் நிலத்தடி நீர்மட்டம் முற்றாகக் குறைந்து 800 ஏக்கர் பாசன விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. குவாரி உரிமையாளர்கள் இந்தப் பகுதி விவசாய நிலங்களுக்கு வரும் தண்ணீரைத் திறக்க விடாமல் சதி செய்து வருவதாக கல்லணை கிராமப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும், அனுமதியின்றி அதிகளவில் பள்ளம் தோண்டுவதோடு, வெடிகளை வைத்து தகர்த்துக் கற்களை வெட்டி எடுப்பதால் வீடுகளில் விரிசல் ஏற்படுவதோடு, குவாரி தூசிகளால் ஆஸ்துமா உள்ளிட்ட நோய்களையும் அப்பகுதி மக்கள் சந்தித்து வருகின்றனர். இதுகுறித்து தொடர் போராட்டங்களை மக்கள் முன்னெடுத்தும், அதிகாரிகள் முதல் ஆட்சியாளர்கள் வரை பலமுறை மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக, கல்குவாரி முதலாளிகளுக்கு ஆதரவாக மக்களின் அறப்போராட்டத்தை திமுக அரசு அடக்க முனைவது இந்த அரசு யாருக்கானது என்ற கேள்வியை எழுப்புகிறது.

திராவிடக் கட்சிகளின் 60 ஆண்டு கால ஆட்சிக்காலத்தில் கல்குவாரிகளுக்காகவும், மலை மணலுக்காகவும், கிரானைட் உள்ளிட்ட கனிம வளத்திற்காகவும் ஏராளமான மலைகள் மற்றும் குன்றுகள் வெட்டி எடுக்கப்பட்டுவிட்டன. நாம் தமிழர் கட்சி இந்த மண்ணில் வந்த பிறகு சுற்றுச்சூழல் குறித்து ஏற்படுத்திய தொடர் பரப்புரையின் விளைவாக விழிப்படைந்துள்ள மக்கள் தற்போது தாங்களே போராடத் தொடங்கியுள்ளனர். ஆனால், அதனையும் திமுக அரசு அதிகார கொடுங்கரம் கொண்டு அடக்கி ஒடுக்க முனைவது கொடுங்கோன்மையாகும்.

கடந்த காலங்களில் அழிக்கப்பட்ட மலைகள், ஆறுகள், காடுகள், நீர்நிலைகள் ஆகியவற்றால் காலநிலை மாற்றம், புவி அதிக வெப்பமாதல் ஆகிய பாதிப்புகளை இன்று நாம் சந்தித்து வருகின்றோம். இயற்கை வளங்கள் யாவற்றையும் அழித்துவிட்டு அடுத்த தலைமுறையின் நல்வாழ்விற்கு நாம் எதனை விட்டுச்செல்லப் போகிறோம்? என்ற கேள்விக்கு இங்கு எவரிடத்தில் பதில் இருக்கின்றது.

ஆகவே, மக்களின் போராட்டத்திற்கு மதிப்பளித்து மதுரை மாவட்டம் கல்லணை கிராமத்தில் மக்களைப் பாதிக்கும் கல்குவாரிகளை தமிழ்நாடு அரசு உடனடியாக மூட வேண்டுமென வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

◆ முத்துகுமார்

Owned and published by S.Sathaivam from 5/185, Thiruvalarchipatti, Airport, Trichy-620007, and Printed by B.Louis at Friends Printers, VVLP Stores, Palakarai, Trichy-620 001. Editor: S.Sathasivam.







# வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி

**மதுரை மாவட்டம்**

## நூற்றாண்டு போற்றும் நான்காண்டு சாதனைகள்

- 2021-2025ம் ஆண்டு வரை கடந்த நான்கு ஆண்டுகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாலைபணிகள் 3 எண்ணம் பணி 4.100 கி.மீ நீளம் சாலைகள் எடுக்கப்பட்டு ரூ.1 கோடி 21 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.
- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வடிகால் பணிகள் 6 எண்ணம் எடுக்கப்பட்டு ரூ.3 கோடி 49 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- மூலதன மானியத் திட்டத்தின் கீழ் பேவர்பிளாக் சாலை, புதிதாக அலுவலக கட்டிடம் மற்றும் மேல்நிலைத்தொட்டி கட்டும் பணிகள் ரூ.2 கோடி 71 இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.
- அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ், நீர்நிலைகள், பூங்கா மற்றும் குடிநீர் மேம்பாட்டு பணிகள் 3 எண்ணம் அமைக்கப்பட்டு ரூ.23 கோடி 65 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டு குடிநீர் மேம்பாட்டு பணிகள் 70 சதவீதம் பணி முடிவுற்றுள்ளது.
- நபார்டு திட்டத்தின் கீழ் 1 எண்ணம் தார்ச்சாலை பணி அமைக்கப்பட்டு ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பாலம் அமைத்தல் 1 எண்ணம் பணி ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1 எண்ணம் சிமெண்ட் சாலை பணி எடுக்கப்பட்டு ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1 எண்ணம் தார்ச்சாலை பணி ரூ.56.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிதாக சமுதாயக்கூடம் 2 எண்ணம் மற்றும் குடிநீர் பணி 1 எண்ணம் ரூ.96.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, இரண்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது 1 எண்ணம் பணி நடைபெற்று வருகிறது.
- தெருவிளக்குகளை எல்.இ.டி. (ஒளிர்விடும்) விளக்குகளாக 1104 எண்ணம் விளக்குகள் ரூ.57.02 இலட்சம் மதிப்பீட்டில் மாற்றப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.
- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 11 எண்ணம் பணிகள் எடுக்கப்பட்டு ரூ.2 கோடி 22 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிவுற்றுள்ளது.
- 15வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் 12 எண்ணம் பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளது.
- பொதுநிதி திட்டத்தின் கீழ் 20 எண்ணம் பணிகள் எடுக்கப்பட்டு 2 கோடி 95 இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.
- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி 1 எண்ணம் எடுக்கப்பட்டு ரூ.1 கோடி 40 இலட்சம் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- ஆக மொத்தம் கடந்த நான்கு ஆண்டுகளில் 43 கோடி 28 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது

**மு.பால்பாண்டியன்**
தலைவர்,
வாடிப்பட்டி பேரூராட்சி.

**ரா.கார்த்திக்**
துணைத் தலைவர்,
வாடிப்பட்டி பேரூராட்சி.

**பா.ஜெயலட்சுமி**
செயல் அலுவலர்,
வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி.

**வார்டு கவுன்சிலர்கள் மற்றும் பேரூராட்சி பணியாளர்கள்**

**வாடிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி, மதுரை மாவட்டம்**

Latchiyam Vellum (Tamil Monthly) RNI. Regd.No.TNTAM 2015/63921. Postal Regd. No:TRY/094/2024-2026




Repacked & Marketed by:

Kani Foods & Spices

NO. 9A SANGAROJITHA PANDITHAR STREET,
TIRUNELVELI TOWN - 627006
Customer Care : 9787927123
email: kanifoods2018@gmail.com
fssai 12418026001348

தமிழகம் முழுவதும் விநியோகஸ்தர்கள் தேவை
தொடர்புக்கு: 90805-02382